இறை வாக்குறுதிகள் நிறைவேறுவதைக் காண்கின்ற ஜல்ஸா! பக்கம் 3

இறையிருப்பிற்கான அறிவியல் சான்றுகள் பக்கம் 8

காதியானும் அதன் புனித, வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களும் (தொடர்-6) பக்கம் 13

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு (தொடர்-20) பக்கம் 19



மாத இதழ்

# நுபுவ்வத் வழி

www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil

Nubuwwat Vazhi | August 2023 | Vol. 2 - Issue No. 9



Ahmadiyya Muslim Jama'at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005
Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 96297 46340





ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கொடியேற்றும் காட்சி




U.K. ஜல்ஸா ஸாலானா - 2023 - மாநாட்டுத் திடலின் ஒரு காட்சி



# திருக்குர்ஆன்

لَيْسَ الْبِرَّ اَنْ تُوَلُّوْا وُجُوْهَكُمْ قِبَلَ الْمَشْرِقِ وَالْمَغْرِبِ
وَلٰكِنَّ الْبِرَّ مَنْ اٰمَنَ بِاللّٰهِ وَالْيَوْمِ الْاٰخِرِ وَالْمَلٰٓىِٕكَةِ وَالْكِتٰبِ
وَالنَّبِيّٖنَ ۚ وَاٰتَى الْمَالَ عَلٰى حُبِّهٖ ذَوِى الْقُرْبٰى وَالْيَتٰمٰى
وَالْمَسٰكِيْنَ وَابْنَ السَّبِيْلِ ۙ وَالسَّآىِٕلِيْنَ وَفِى الرِّقَابِ ۚ
وَاَقَامَ الصَّلٰوةَ وَاٰتَى الزَّكٰوةَ ۚ وَالْمُوْفُوْنَ بِعَهْدِهِمْ اِذَا عٰهَدُوْا ۚ
وَالصّٰبِرِيْنَ فِى الْبَاْسَآءِ وَالضَّرَّآءِ وَحِيْنَ الْبَاْسِ ؕ
اُولٰٓىِٕكَ الَّذِيْنَ صَدَقُوْا ؕ وَاُولٰٓىِٕكَ هُمُ الْمُتَّقُوْنَ

கிழக்கு, மேற்கு ஆகியவற்றின் பக்கமாக உங்கள் முகங்களைத் திருப்புதல் (பெரிய) நன்மையன்று. ஆயினும் அல்லாஹ்விடத்தும், இறுதி நாளிடத்தும், வானவர்களிடத்தும், இறைவேதத்திடத்தும், எல்லா நபிமார்களிடத்தும் எவர் நம்பிக்கை கொண்டு (அல்லாஹ்வாகிய) அவன் மீது கொண்டுள்ள நேசத்தால் உறவினர்களுக்கும், அனாதைகளுக்கும், ஏழைகளுக்கும், வழிப்போக்கர்களுக்கும், பிச்சை எடுப்பவர்களுக்கும், அடிமைகளுக்கு(விடுதலை அளிப்பதற்கு)ம் தமது பொருளைச் செலவு செய்து தொழுகையை நிலைநாட்டி, ஸக்காத் கொடுக்கின்றாரோ அவரே முழுமையான நல்லவராவார். மேலும் வாக்குறுதி அளித்தால், தாங்கள் அளித்த வாக்குறுதியினை நிறைவேற்றுபவர்களும், வறுமையிலும், நோயிலும், போர் வேளையிலும், பொறுமையுடன் இருப்பவர்களும் (முழுமையான நல்லவர்கள்) ஆவர். இவர்களே உண்மையாளர்கள். மேலும், இவர்களே இறையச்சம் உடையோர்கள்.(2:178)



# ஹதீஸ்

عَنْ عَبْدِ اللَّهِ بْنِ عَمْرٍو، أَنَّ رَجُلاً، سَأَلَ النَّبِيَّ
صلى الله عليه وسلم أَىُّ الإِسْلاَمِ خَيْرٌ قَالَ
"تُطْعِمُ الطَّعَامَ، وَتَقْرَأُ السَّلاَمَ عَلَى مَنْ عَرَفْتَ،
وَعَلَى مَنْ لَمْ تَعْرِفْ ".

ஹஸ்ரத் அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஒரு நபர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், இஸ்லாத்தின் எந்த செயல் சிறந்தது என வினவினார். ஹஸ்ரத் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'உணவளிப்பதும், நீங்கள் அறிந்த மற்றும் அறியாத நபருக்கு ஸலாம் கூறுவதும் ஆகும்.'

(புகாரி, கிதாபுல் ஈமான் ஹதீஸ் எண் 6236)

# இறை வாக்குறுதிகள் நிறைவேறுவதைக் காண்கின்ற ஜல்ஸா!

## மூன்று மரக் குடிசைகளிலிருந்து பிரமிப்பூட்டும் கட்டடங்கள் வரை!!

☆ ☆ ☆ ரோமான் பாஸித், அஹ்மதிய்யா காப்பகம் மற்றும் ஆராய்ச்சி மையம் ☆ ☆ ☆

தமிழாக்கம்: A. நாஸிர் அஹ்மது



ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் பஞ்சாபில் ஒரு குக்கிராமமான காதியானில் இருந்து தாமே இக்காலத்திற்கான வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்று வாதம் புரிந்தார்கள். அவர்களைப் பின்பற்றியவர்கள் சிலராக இருந்தனர். அவர்களின் வாதத்தின் எதிர்விளைவின் காரணமாக நண்பர்களும் எதிரிகளாயினர். இந்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் அன்னார் எவ்வாறு ஒரு ஜமாஅத்தை நிறுவப் போகிறார்கள் என்ற கேள்வி இயல்பாகவே இருந்தது.

இந்தப் பின்னணியில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு நற்செய்திகளாக பல இறை வெளிப்பாடுகள் அருளப்பட்டன. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களிடம் அன்னாரின் தூதுச் செய்தி பூமியின் எல்லை வரை எட்டி விடும் என்று கூறப்பட்டது. மேலும் அன்னாரைப் பின்பற்றுபவர்கள் காதியானின் எல்லைக்குள் சிலராக இருந்த காலத்தில் அவர்களைப் பின்பற்றும் ஒருபெரும் கூட்டத்தைச் சமாளிக்கத் தயாராக இருக்குமாறும் அவர்களிடம் கூறப்பட்டது.

1897-ல் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) பின்வரும் இறை அறிவிப்பைப் பெற்றார்கள்.

وَسِّعۡ مَكَانَكَ۔ يَاۡتُوۡنَ مِنۡ كُلِّ فَجٍّ عَمِيۡقٍ "உமது வீட்டை விரிவுபடுத்துவீராக! மக்கள் தொலை தூரத்திலிருந்து உம்மிடம் வருவர்" (தத்கிரா ஆங்கிலப் பதிப்பு பக்கம் 382)

அந்தக் காலத்தில் ஜமாஅத்தில் நிதிப் பற்றாக்குறை அதிகமாகவே இருந்தது. எந்த அளவுக்கெனில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

உமது வீட்டை விரிவுபடுத்துவீராக என்ற வஹி வந்ததும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் (அப்துல்லாஹ் சனோரி சாஹிபிடம்) நம்மிடம் வீடுகள் கட்டுவதற்குப் போதிய பணவசதி இல்லை. எனவே இந்த இறை அறிவிப்பின்படி செயல்படுவதற்கு மரத்தினாலான 2 அல்லது 3 குடிசைகளை நாம் தயார் செய்வோம் என்று கூறினார்கள்.

இவ்வாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது வீட்டில் 3 மரக் குடிசைகளைச் செய்தார்கள். அவை 3 ஆண்டுகள் இருந்தன. பின்னர் உலர்ந்து விட்டன.

இந்த 3 மரக் குடிசைகளே அஹ்மதிய்யா ஜமாஅத்தின் விரிவாக்கத்தின் ஆரம்பமாக இருந்தன. ஹஸ்ரத் சூ∴பி அஹ்மது ஜான் அவர்களது வீட்டில் நடந்த முதல் பைஅத் நிகழ்வின்போது 40 நபர்கள் கலந்து கொண்டனர். 1891-ல் நடைபெற்ற முதலாவது ஜல்ஸா ஸாலானாவில் 75 அஹ்மதிகள் கலந்து கொண்டனர். ஆனால் இந்த இறை அறிவிப்புகளுக்கு மத்தியில் அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் தனது உதவியைப் பற்றியும் வாக்குறுதிகள் அளித்திருந்தான். அந்த வாக்குறுதிகள் அவற்றிற்கு உரிய காலத்தில் நிறைவேறத் தொடங்கின.

இதற்குப் பின்னர் அன்னாரது ஜமாஅத் பெருகத் தொடங்கியது. அல்லாஹ் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு தனது அருட்கொடைகளை வழங்கினான். இந்த முன்னறிவிப்புகளும் (பிற முன்னறிவிப்புகளும்) ஒவ்வோர் அடியின் போதும் வெளிப்படத் துவங்கின.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கதவிற்கு ஒரு பெருங்கூட்டம் வரும் என்ற முன்னறிவிப்பு நிறைவேறியதற்கு இன்று முழு உலகிலும் உள்ள அஹ்மதிகள் சாட்சிகளாவர். குறிப்பாக இந்த ஜல்ஸா ஸாலானா அதற்குச் சாட்சியாகும்.

ஜல்ஸா ஸாலானா ஒவ்வோர் ஆண்டும் விரிடைந்து கொண்டே வருகிறது. உமது வீட்டை விரிவுபடுத்துவீராக என்ற முன்னறிவிப்பின்படி இன்று வாக்களிக்கப்பட்ட மஸீஹின் விருந்தினர்களை தங்க வைப்பதற்கு 5 இடங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன.

∴பஸ்ல் பள்ளிவாயில், இஸ்லாமாபாத், பைத்துல் ∴புதூஹ் பள்ளிவாயில், ஜாமிஆ அஹ்மதிய்யா UK மற்றும் ஹதீகத்துல் மஹ்தி (இவற்றில் ஜமாஅத்திடம் உள்ள விருந்தினர் இல்லங்கள் சேர்க்கப்படவில்லை)

## ஃபஸ்ல் பள்ளிவாயில்

ஃபஸ்ல் பள்ளிவாயில் 1926-ம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது. ஜமாஅத்தின் பெண்கள் இந்தத் திட்டத் -திற்காக முன்வந்தனர். அவர்களின் நன்கொடைகளைக் கொண்டே இந்தப் பள்ளிவாயில் கட்டப்பட்டது. 1964-ல் UK-ன் முதலாவது ஜல்ஸா ஸாலானா இங்கு வைத்து தான் நடைபெற்றது. அந்த நேரத்தில் விருந்தினர்களை தங்க வைப்பது பெரும் சவாலாக இருந்தது. அப்போதைய இமாம் பஷீர் அஹ்மத் ர.ஃபீக் சாஹிப் எழுதுகிறார்கள்:

“இலண்டனுக்கு வருகை தந்த விருந்தினர்களுக்கு தங்குமிடம் செய்து கொடுப்பது மிகவும் கடினமாக இருந்தது. இலண்டன் ஜமாஅத்தின் உறுப்பினர்கள் தியாகத்தின் உணர்வை வெளிப்படுத்தியவர்களாக விருந்தினர்களை தமது இல்லங்களில் தங்க வைத்துக் கொண்டனர். அவர்கள் தமது வீடுகளின் வரவேற்பறை -களை விருந்தினர்களுக்கென ஒதுக்கி விட்டனர். (‘The First Jalsa Salana UK, 1964’, Al Hakam, 30, July 2021, Issue 176, p. 20)”

இன்று அல்லாஹ்வின் அருளினால் விருந்தினர் -களைத் தங்க வைப்பதில் எந்தக் கஷ்டமும் இல்லை. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினர்களை தங்க வைப்பதில் ஃபஸ்ல் பள்ளிவாயில் தனது பங்கைச் செலுத்துகிறது.

## இஸ்லாமாபாத்

1984-ல் டில்ஃபர்டில் 25 ஏக்கர் பரப்பு கொண்ட ஒரு பள்ளிக்கூடத்திற்குச் சொந்தமான இடத்தை ஜமாஅத் ஏலத்தில் பெற்றது. ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் அந்த இடத்திற்கு இஸ்லாமாபாத் எனப் பெயரிட்டார்கள். ஹதீக்கத்துல் மஹ்திக்குச் செல்வதற்கு முன்னர் இஸ்லாமாபாத்தில் தான் ஜல்ஸா ஸாலானா பல வருடங்களாகத் தொடர்ந்து நடத்தப்பட்டு வந்தது. சமீப காலத்தில் இங்கு முபாரக் பள்ளிவாயில் கட்டப்பட்டது. ஒரு நவீன காம்ப்ளக்ஸ் உருவாக்கப்பட்டது. ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் 2019-ல் ஒரு வரலாற்று நிகழ்வாக கிலாஃபத்தின் தலைமையகத்தை ஃபஸல் பள்ளிவாயிலிலிருந்து இஸ்லாமாபாத்திற்கு மாற்றிக் கொண்டார்கள்.





ஓவ்வொரு வருடமும் அதிக அளவிலான விருந்தினர்கள் இங்கு தங்குகின்றனர். தங்குவதற்கான வசதிகள் செய்யப்பட்டிருப்பதுடன் மூன்று வேளை உணவும் லங்கர் கானாவிலிருந்து பரிமாறப்படுகிறது.

## பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசல்

பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயில் மேற்கு ஐரோப்பாவின் மிகப் பெரிய பள்ளிவாயில்களுள் ஒன்றாகும். 16000 பேர் தொழக் கூடிய வசதி கொண்டது. 2003-ஆம் ஆண்டு ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களால் திறந்து



வைக்கப்பட்டது. திறப்புவிழாவின் போது 17 நாடுகளைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், உயர் கமிஷனர்கள், கவுன்சிலர்கள் உட்பட 600 விருந்தினர்கள் கலந்து கொண்டனர்.

75 பேர் கலந்து கொண்ட முதலாவது ஜல்ஸாவின் எளிய துவக்கத்துடன் நாம் இதனை ஒப்பிடும்போது வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு அல்லாஹ் வழங்கிய வாக்குறுதிகள் இன்று வரை பகலைப் போன்று பிரகாசமாக நிறைவேறி வருவதை நாம் காண முடிகிறது. இனிமேலும் அவை நிறைவேறிக் கொண்டே இருக்கும், இன்ஷாஅல்லாஹ்.

ஒவ்வோர் ஆண்டும் அதிக எண்ணிக்கையில் விருந்தினர்கள் தங்க வைக்கப்படும் இடங்களில் இதுவும் ஒன்றாகும். இதில் உள்ள பல்நோக்கு அரங்குகள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் விருந்தினர்களை வரவேற்கும் விருந்தினர் இல்லங்களாக மாறி விடுகின்றன.

## ஜாமிஆ அஹ்மதிய்யா UK



வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஜமாஅத்தின் இரு பெரும் அறிஞர்களின் மறைவிற்குப் பிறகு காதியானில் மத்ரஸா அஹ்மதிய்யாவை நிறுவி-னார்கள். இதுவே பின்னர் ஜாமிஆ அஹ்மதிய்யாவாக மாறியது. ஆரம்ப வருடங்களில் நிச்சயமற்ற காலத்தைக் கடக்க நேர்ந்த மத்ரஸா அஹ்மதிய்யாவிற்கு மண் குடிசைகளுக்கும் தொழுவங்களுக்கும் இடம் பெயர வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

இது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது வீட்டில் விருந்தினர்களுக்காக மரத்தினாலான குடிசைகளை ஏற்படுத்தியதை நினைவுபடுத்துகிறது.

UK-ன் ஜாமிஆ வளாகம் 2005-ல் ஏற்படுத்தப்-பட்டது. பின்னர் ஒரு புது வளாகம் ஹேஸ்ல்மேர் சர்ரேயில் பெறப்பட்டது. 2012-ல் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃ.பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் இதனைத் திறந்து வைத்தார்கள். முழு வருடமும் ஒரு கல்விக்கூடமாக வருங்கால பிரச்சாரகர்கள் தங்குகின்ற இடமாக இது திகழ்கின்றது. ஆனால் ஜல்ஸாவின்போது இது விருந்தினர்களைத் தங்க வைக்கின்ற உயர்தர ஹோட்டல்களைப் போன்ற வசதிகளைப் பெற்று விடுகிறது. பூமியின் தொலை தூரப் பகுதிகளிலிருந்து உதாரணமாக மொரோக்கா, டியூனிஸியா, பாலஸ்தீனம், கானா, நைஜீரியா போன்ற பல்வேறு நாடுகளிலிருந்து வருகின்ற விருந்தினர்கள் இங்கு தங்குகின்றனர். உண்மையிலேயே இது "உமது வீட்டை விரிவுபடுத்துவீராக, தொலை தூரப் பகுதிகளில் இருந்து மக்கள் உம்மிடம் வருவர்" என்பதன் கம்பீரமான தோற்றமாகும்.

## ஹதீகத்துல் மஹ்தி

ஹேம்ப்ஷயரில் உள்ள ஹதீகத்துல் மஹ்தி 2005-ல் விலைக்கு வாங்கப்பட்ட 208 ஏக்கர் பரப்பு கொண்ட ஒரு பண்ணை நிலமாகும். இதுவே தற்போது ஜல்ஸா நடைபெறும் இடமுமாகும். ஒவ்வோர் ஆண்டும் வெறும் 28 நாட்களில் இந்தப் பண்ணை நிலம் ஒரு பிரமாண்டமான கூடார நகரமாக மாறி விடுகிறது. ஆண்டுக்கு ஆண்டு அரங்குகளின் அளவும் சரி, ஆயிரக்கணக்கான விருந்தினர்ளை கவனித்துக் கொள்ளும் தற்காலிகக் கட்டமைப்புகளும் சரி, மேலும் மேலும் பொலிவு பெற்று வருகின்றது. ஹதீகத்துல் மஹ்தி வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைத் தன்மைக்கு மற்றுமொரு மகத்தான சான்றாகும்.

இந்த ஆண்டின் ஜல்ஸா ஸலானாவும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்ட மாபெரும் முன்னறிவிப்புகள் நிறைவேறும் காட்சிகளைக் காண்கின்றது. வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கலீஃ.பாவின் குரலைக் கேட்பதற்காக தொலை தூரப் பகுதிகளிலிருந்து மக்களைக் கொண்டு வருவதுடன் அல்லாஹ் எவ்வாறு அன்னாரது வீட்டை விரிவுபடுத்துகிறான் என்பதை மீண்டும் ஒருமுறை நாம் காண்கின்றோம்.

(அல் ஹகம் 22, ஜூலை 2023)



சிறுவர் பகுதி

# மார்க்க அறிவுப் புத்தகம்




தமிழாக்கம்: M.M. இப்ராஹீம்

## 4. அஹ்மதிய்யத்

1. அஹ்மதிய்யத் என்றால் என்ன?

 ‘அஹ்மதிய்யத்’ என்றால் இக்காலத்தில் இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்காக இறைக் கட்டளையால் தோற்றுவிக்கப்பட்ட ஆன்மீக அமைப்பு ஆகும்.

2. அஹ்மதிய்யத்தின் தோற்றுநர் யார்?

 ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்கள் அஹ்மதிய்யத்தின் தோற்றுநர் ஆவார்கள்.

3. ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் அவர்களின் வாதம் என்ன?

 இந்தக் காலத்தில் தோன்றுவதாக வாக்களிக்கப்பட்டிருந்த ‘மஹ்தி’ மற்றும் ‘சீர்திருத்தவாதி’ தாமே என்பதாகும்.

4. அவர்கள் எங்கு எப்போது பிறந்தார்கள்?

 அவர்கள் 1835-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் தேதி இந்தியாவில் பஞ்சாப் மாகாணத்திலுள்ள காதியான் என்னும் ஊரில் பிறந்தார்கள்.

5. அவர்களின் தந்தையார் பெயர் என்ன?

 அவர்களின் தந்தையார் பெயர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் முர்தஸா என்பதாகும்.

6. அவர்களின் தாயார் பெயர் என்ன?

 அவர்களின் தாயார் பெயர் சிராக் பீபீ என்பதாகும்.

7. முதல் உடன்படிக்கை (பைஅத்) இணைத்துக் கொள்ளுதல் எப்போது எங்கு எந்த இடத்தில் நடைபெற்றது?

 1889-ஆம் ஆண்டு மார்ச் 23-ஆம் தேதி லூதியானாவிலுள்ள ஹஸ்ரத் ஸூ஼பி அஹ்மத் ஜான் என்பவருடைய வீட்டில் வைத்து முதல் பைஅத் நிகழ்ந்தது.

8. அவர்களை, முதன் முதலில் பைஅத் செய்து பின்பற்றியவர் யார்?

 ஹஸ்ரத் மவ்லவி நூருத்தீன் (ரலி) அவர்கள் முதன் முதலில் பைஅத் செய்து இணைந்தவர் ஆவார்கள்.

9. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் மீது நம்பிக்கை கொண்டவர்கள் எவ்வாறு அழைக்கப்படுகிறார்கள்?

 ‘அஹ்மதி முஸ்லிம்கள்’ என்று அழைக்கப்படுகிறார்கள்.

10. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் எத்தனை நூல்கள் எழுதினார்கள்?

 ஹஸ்ரத் அஹ்மது அலை) அவர்கள் 85 நூல்கள் எழுதியுள்ளார்கள. பெரும்பாலும் உருது மொழியிலேயே எழதியுள்ளார்கள்.

11. அவர்கள் எழுதிய முதல் நூல், கடைசி நூல் எவை?

 அவர்கள் எழுதிய முதல் நூல் ‘பராஹீனே அஹ்மதிய்யா’ ஆகும். கடைசி நூல் ‘பயகாமே ஸுல்ஹ்’ (சமாதானத் தூது) ஆகும்.

12. அவர்களால் எழுதப் பெற்ற ஐந்து நூல்களின் பெயர் கூறுக:

 1) பரகாத்துத் துஆ (பிரார்த்தனையின் அருட்கள்)
 2) மஸீஹ் ஹிந்துஸ்தான் மே (இந்தியாவில் இயேசு)
 3) ஃபத்ஹே இஸ்லாம் (இஸ்லாத்தின் வெற்றி)
 4) ஹகீகத்துல் வஹி (இறை வெளிப்பாடுகள் பற்றிய உண்மை)
 5) இஸ்லாமி உஸுல் கி ஃபிலாசஃபி (இஸ்லாமிய போதனைகளின் தத்துவஞானம்)

13. ‘இக்காலத்தின் சீர்திருத்தவாதியாக’ தன்னை இறைவன் அனுப்பியதாக அன்னார் கூறும் இறை வெளிப்பாடு யாது?

 ‘குல் இன்னீ உமிர்த்து வஅனா அவ்வலுல் முஃமினீன்’ (நீர் கூறுவீராக! இறைவனால் நிமிக்கப்பட்டுள்ள நான் நம்பிக்கை கொண்டோருள் முதல்வனாவேன்.)

14. ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களுக்கு கல்வி கற்பித்த ஆசிரியர்கள் சிலரின் பெயர் கூறுக:

 ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் எந்தப் பள்ளிக்கும் சென்று கற்கவில்லை. அவர்களது



லூதியானாவில் முதல் பைஅத் நடைபெற்ற இடம்

ஆசிரியர்கள்: (1) மவ்லவி ஃபஸல் இலாஹி சாஹிப் (2) மவ்லவி ஃபஸல் அஹ்மத் சாஹிப் (3) மவ்லவி குல் அலி ஷாஹ் சாஹிப் ஆகியோர் ஆவர்.

15. ஹஸ்ரத் அஹ்மத் (அலை) அவர்களின் முதல் மனைவியின் பெயர் என்ன?

அவர்களின் முதல் மனைவியின் பெயர் 'ஹுர்மத் பீவி' ஆகும்.

16. முதல் திருமணத்தில் அவர்களுக்குப் பிறந்த குழந்தைகள் யாவர்?

1) மிர்ஸா ஸுல்தான் அஹ்மத்

2) மிர்ஸா ஃபஸல் அஹ்மத்

17. அவர்கள் இரண்டாவதாக எப்போது திருமணம் புரிந்தார்கள்? அவர்களது இரண்டாவது மனைவி -யின் பெயர் என்ன?

அவர்கள் 1884-ஆம் ஆண்டு நவம்பர் 17-ஆம் தேதி இரண்டாவது திருமணம் செய்தார்கள். அவர்களது இரண்டாவது மனைவியின் பெயர் 'நுஸ்ரத் ஜஹான்' என்பதாகும்.

18. இரண்டாவது திருமணத்தின் வாயிலாக அவர்களுக்கு எத்தனை குழந்தைகள் பிறந்தனர்?

அவர்களின் இரண்டாவது திருமணத்தின் வாயிலாக அவர் -களுக்கு பத்து குழந்தைகள் பிறந்தனர். அவர்களில் ஐவர் தமது குழந்தைப் பருவத்திலேயே இறந்து விட்டனர். மீதமுள்ள ஐவர் பெயர்கள்:

1) ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் (மகன்)

2) ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் (மகன்)

3) ஹஸ்ரத் மிர்ஸா ஷரீஃப் அஹ்மத் (மகன்)

4) ஹஸ்ரத் நவாப் முபாரகா பேகம் (மகள்)

5) ஹஸ்ரத் அமத்துல் ஹஃபீஸ் (மகள்)

19. அவர்களது தாயார் எப்போது காலமானார்கள்?

ஹஸ்ரத் அஹ்மத் (அலை) அவர்களுக்கு 33 வயதாக இருக்கும்போது 1868-ஆம் வருடம் காலமானார்கள்.

20. அவர்களின் தந்தையார் எப்போது காலமானார்கள்?

அவர்களது தந்தையார் 1876-ஆம் ஆண்டில் காலமானார்கள்.

21. அவர்களின் தந்தையார் இறந்த போது ஹஸ்ரத் அஹ்மத் (அலை) பெற்ற இறைவெளிப்பாடு யாது?

'அலைஸல்லாஹு பிகாஃபின் அப்தஹு' என்ற இறைவெளிப்பாடு வரப் பெற்றது. அதன் பொருளாவது: தன் அடியாருக்கு இறைவன் போதுமானவன் இல்லையா? என்பதாகும்.



ஹோஷியார்பூரில் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) தனித்திருந்து இறைவணக்கத்தில் ஈடுபட்ட அறை

22. ஹஸ்ரத் அஹ்மத் (அலை) அவர்கள் ஹோஷியார் -பூருக்குச் சென்றதன் முக்கியத்துவம் என்ன?

1886-ஆம் ஆண்டு தனிமையான இடத்தில் அமர்ந்து 40 நாட்கள் இறை வணக்கத்திலும் தியானத்திலும் கழிப்பதற்காகவே அங்கு சென்றார்கள்.

23. இந்தப் பிரயாணத்தின்போது அவர்களுடன் சென்றவர்கள் யாவர்?

மியான் அப்துல்லாஹ் சனோரி, ஷேக் ஹாமீத் அலி மற்றும் ஃபதஹ் கான் அவர்களுடன் சென்றனர்.

24. ஹோஷியார்பூரில் இறைவணக்கத்திலும் தியானத்திலும் ஈடுபட்ட ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு வரப் பெற்ற இறைவெளிப்பாடு யாது?

இறைவன் தனக்கு ஒரு மகத்துவமிக்க சீர்திருத்தவாதியாக (முஸ்லிஹ் மவ்வூது) விளங்கும் ஒரு மகனை வழங்குவான் என்பதாகும்.

25. சிறப்புமிக்க மகனைப் பற்றிய இந்த இறை அறிவிப்பு எப்போது முதன் முதலாக வெளிப்பட்டது?

1886-ஆம் ஆண்டு பிப்ரவரி 20-ஆம் நாளில் ஒரு பச்சைக் காகிதத்தில் வெளியிடப்பட்டது.

26. வாக்களிக்கப்பட்ட மகன் யார்? அவர் எப்போது பிறந்தார்?

ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் அவர்களே வாக்களிக்கப்பட்ட மகன் ஆவார். இவர்கள் 1889-ஆம் ஆண்டு ஜனவரி 12-ஆம் தேதி பிறந்தார்கள்.

27. முதல் ஆண்டு மாநாடு (ஜல்ஸா ஸாலானா) எப்போது நடைபெற்றது?

முதல் ஜல்ஸா ஸாலானா 1891-ஆம் ஆண்டு டிசம்பர் 27-ஆம் தேதி காதியானில் நடைபெற்றது.

28. முதல் ஜல்ஸாவில் எத்தனை பேர் கலந்து கொண்டனர்?

75 நபர்கள் கலந்து கொண்டனர்.

29. 'ஜங்கே முகத்தஸ்' என்றால் என்ன?

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் 1893-ஆம் ஆண்டு அமிர்தசரஸிலுள்ள கிறிஸ்தவர்களுடன் வெளிப்படையாக ஒரு கருத்துப் பரிமாற்றம் நடத்தினார்கள். இதற்கு 'ஜங்கே முகத்தஸ்' என்று பெயர்.

30. இந்த யுத்தத்தில் பங்கேற்ற கிறித்தவ பாதிரி யார்?

'ரெவரெண்ட் அப்துல்லாஹ் ஆத்தம்' என்ற பாதிரியார் ஆவார்.

(தொடரும்...)

# இறையிருப்பிற்கான அறிவியல் சான்றுகள்

**டாக்டர் ஃபஹீம் யூனுஸ் குரைஷி சாஹிப்** நாயிப் அமீர் மற்றும் தேசிய தர்பிய்யத் செயலர், U.S.A.

**U.K. ஜல்ஸா ஸாலானா - 2023**

தமிழாக்கம்: இப்னு வஸீம், காதியான்

இது நமது சொந்தக் கதை! ஆனால், நமக்கு இது நினைவில்லை! நாம் இந்த உலகத்திற்கு வந்தபோது குழந்தைகளாக இருந்தோம். இயலாதவர்களாக இருந்தோம். பசி எடுக்கும்; ஆனால், தாயிடம் நடந்து செல்ல ஆற்றல் இருக்காது. எனவே, பசியால் நிம்மதி இழந்து அழுது புலம்பி வந்தோம். பிறகு, தாய் பாலூட்டி வந்தாள். இந்த அனுபவத்திற்குப் பின்னால், ஒரு நுட்பமான அறிவியல் உள்ளது. MRI Scan மூலமாக தெரிய வருவதாவது, நாம் அழும் சத்தம் தாயின் காதுகளின் திரைகள் வழியாக அவளுடைய மூளையை எட்டும்...... பிறகு, தாயின் தலையில் Posterior Pituitary எனப்படும் பட்டாணி அளவிலான ஒரு சுரப்பியிலிருந்து Oxytocin வெளி வரும். அதன் தாக்கத்தால் தாயின் மார்பிலிருந்து பால் சுரந்து வரும்.



இந்த செயல் சில வினாடிகளில் நடந்து முடிந்து விடுகிறது என்பதும், இது தாயின் கட்டுப்பாட்டில் கூட இருப்பதில்லை என்பதும் ஆய்வின் மூலம் தெரிய வருகிறது. தாய்க்கும் சேய்க்குமான இந்தத் தொடர்பு ஓர் உருவகமாகக் கூறப்பட்டுள்ளது..... எல்லாம் வல்ல அல்லாஹ்வோ لَمْ يَلِدْ وَلَمْ يُوْلَدْ ஆவான். (அதாவது, அவன் எவரையும் பெறவுமில்லை. எவராலும் பெறப்படவுமில்லை.) ஆனால், இந்த உருவகத்தில் நமக்கு அறிவியல் ரீதியாக இறையிருப்பு வரை சென்றடை-வதற்கான வழி கிடைத்து விடலாம்.

பொதுவாக நாம் இறையிருப்பிற்கான அறிவியல் சான்றுகளைப் பற்றி பேசும்போது, யாராவது ஓர் இறை மறுப்பாளரை விவாதத்தில் ஏற்றுக் கொள்ள வைக்க வேண்டும் என்பதுதான் நோக்கம் என்று மக்கள் நினைக்-கிறார்கள். ஆனால், ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் பல மெய்நிகர் சந்திப்புகளில் இவ்வாறு கூறியுள்ளார்கள்: முதலில் நாம் நம் பிள்ளைகள் அந்த இறை மறுப்பாளர்களின் தாக்கத்திற்கு ஆளாகி விடாது இருக்கும் பொருட்டு, அவர்களைப் பாதுகாக்க வேண்டிய தேவை இருக்கிறது.

இந்த வழிகாட்டலின் கீழ் இன்றைய உரை பிள்ளைகளுக்காகவும் பெரியவர்களுக்காகவும் நிகழ்த்தப்படுகிறது. எனவே, நாம் இந்த உரையைத் திருக்குர்ஆனின் ஒளியில் நிகழ்த்த வேண்டும். ஓர் இறை மறுப்பாளர், 'திருக்குர்ஆன் கூறுவதை ஏன் ஏற்க வேண்டும்?' என்று நீங்கள் கேட்கலாம். சரிதான்! ஆனால், திருக்குர்ஆன் அறிவியல் எதிர்பார்ப்புகளை முழுமை-யாகத் தன்னிடம் கொண்டிருக்கிறது என்பதனால் தான் நாம் திருக்குர்ஆனை முன்வைக்கிறோம். இது இறைவனைப் போன்று மறைந்துள்ள விஷயமல்ல. இதைப் பார்க்க முடியும். இதன் சான்றுகளை அனுபவ ரீதியாகக் காண முடியும்.

இன்றும் இஸ்தான்புலில் இருக்கும் தொப்காப்பி எனும் மாளிகைக்குச் சென்று, ஏழாம் நூற்றாண்டின் திருக்குர்ஆனைக் கையில் ஏந்த முடியும். நாம் கடந்த 500 ஆண்டுகளில் திருக்குர்ஆனை மாற்றம் செய்து, அதில் தற்போதைய காலத்தின் அறிவியல் கண்டுபிடிப்புகளை நுழைத்து விட்டோம் என்று எந்த இறைமறுப்பாளரும் வாதிப்பதில்லை.

நம் பிள்ளைகள் பள்ளிக்கூடங்களில் அறிவியல் கல்வி கற்க கற்க, இந்த உண்மைகளைத் திருக்குர்ஆனில் 1400 ஆண்டுகளுக்கு முன்னரே அல்லாஹ் கூறி விட்டான் என்பதை அவர்களுக்குக் கூற வேண்டியது நமது பணியாகும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் இந்தச் சொற்களை நினைவுபடுத்திக் கொண்டே இருங்கள்: "திருக்குர்ஆன் அல்லாஹ்வின் கூற்றாகும். அறிவியல் அல்லாஹ்வின் செயலாகும்."

ஆரம்பப் பள்ளியில் படிக்கும் பிள்ளைகள் அறிவியல் வகுப்பில் இந்த விஷயத்தைப் படித்துக் கொண்டிருப்-பார்கள்: பதினாறாவது, பதினேழாவது நூற்றாண்டில் Galileo, Copernicus மற்றும் Kepler போன்ற விஞ்ஞானிகள் தான் சூரியனும் பூமியும் அசையாமல் இல்லை. மாறாக, தத்தமது சுற்றுப் பாதையில் சுழன்று கொண்டிருக்கின்றன என்ற விஷயத்தைக் கண்டுபிடித்தார்கள்.

ஆனால் எல்லாம் வல்ல அல்லாஹ் 1400 ஆண்டுகளுக்கு முன்பு சூரா அல் அன்பியாவில் கூறியுள்ள இந்த விஷயத்தையும் படித்திருக்கிறீர்களா?

'அவனே இரவையும் பகலையும், சூரியனையும் சந்திரனையும் படைத்தான். அவை அனைத்தும் (தத்தமது) சுற்றுப் பாதைகளில் சுழன்று கொண்டிருக்-கின்றன.'

உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் Biology (உயிரியில்) மற்றும் Physics (இயற்பியல்) வகுப்பில் இந்த விஷயத்தைப் படித்துக் கொண்டிருப்பார்கள்: அறிவியல் ஒவ்வொரு பொருளுக்கும் இணையைக் கண்டுபிடித்துள்ளது. உதாரணமாக, பூக்களின் ஆண் பகுதி Stamens - மகரந்தங்கள் என்றும், பெண் பகுதி Pistils - மலர்ச் சூலகம் என்றும் அழைக்கப்படுகின்றன. இந்த அறிவியல் கண்டுபிடிப்புக்குப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு திருக்குர்ஆன் சூரா யாஸீனில் இவ்வாறு கூறுகிறது:

"பூமி முளைக்கச் செய்வதையும், அவர்களையும், இன்னும் அவர்கள் அறியாதவற்றையும் எல்லாம் இணைகளாகப் படைத்தவன் தூயவன் ஆவான்."

'அவர்கள் அறியாதவற்றையும்' இந்தக் கடைசிப் பகுதி கவனம் செலுத்த வேண்டியதாகும். இந்த வசனம் இறங்கிய போது Matter அதாவது, பெண்பாலின் இணை Antimatter ஆகும் என்பதை உலகம் அறிந்திருக்க-வில்லை. Dirac Paul இதை 1933-இல் கண்டுபிடித்து நோபல் பரிசு பெற்றார்.

ஓர் அணுவுக்குள்ளும் Protons மற்றும் Neutrons-ன் இணைகள் இருக்கின்றன என்பதை உலகம் அறிந்திருக்கவில்லை. Rutherford மற்றும் Chadwick இதை 1909-லும் 1932-லும் கண்டுபிடித்தார்கள். இந்த Protons மற்றும் Neutrons-க்குள் அதையும் விடச் சிறிய Subatomic Particles இருக்கின்றன் அவற்றை Quarks என்பார்கள் என்பதை உலகம் அறிந்திருக்கவில்லை. Gellman மற்றும் Zweig இதை 1964 -ல் கண்டுபிடித்-தார்கள்...... ஒரு மணல் துகளுக்குள் 45 கோடி Quarks இருக்கின்றன.

இவை அனைத்தையும் உலகம் அறிந்திருக்க வில்லை. ஆனால், நம் இறைவன் அறிந்திருந்தான் என்பது இந்த கண்ணியத்திற்குரிய வசனங்களில் இருந்து தெரிய வருகிறது.

ஒருபுறம் Copernicus, Kepler, Galileo, Dirac, Rutherford, Chadwick, Gellman போன்றோர் இருக்கிறார்கள்........ இலட்சக்கணக்கான பவுண்டுகள்







மதிப்புள்ள Laboratory-களில் வேலை செய்பவர்கள் நோபல் பரிசுகள் வென்ற விஞ்ஞானிகள் ஆவார்கள்.

மறுபுறம் அரேபியாவின் பாலைவனத்தில் ஓர் எழுதப் படிக்கத் தெரியாத தூதர் (ஸல்) அவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு எழுதவும் தெரியாது படிக்கவும் தெரியாது. இந்த உலகத்தைப் படைத்தவன் ஒருவன் இல்லையென்றால், இறைவன் ஒருவன் இல்லை என்றால், பிறகு, யார் இந்த அறிவியல் இரகசியங்களை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு வெளிப்படுத்தியது? இது வெறும் தற்செயல் என்றால், மற்ற மதங்களின் வேதங்களில் இது போன்ற தற்செயலான விஷயங்கள் ஏன் கிடைப்பதில்லை?

கல்லூரிக்குச் செல்லும் மாணவர்களில் கடல்கள் பற்றிய அறிவியலை, அதாவது, Oceanography படித்துக் கொண்டிருப்பவர்கள் இந்த விஷயத்தை அறிவார்கள்: கோடிக்கணக்கான பவுண்டுகள் செலவழித்து ஆய்வு செய்த பிறகு, கடலை தண்ணீரின் மூன்று அடுக்குகள் மூடியுள்ளன என்பதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்-தார்கள்.

முதல் 200 மீட்டரை Euphotic zone (ஒளிமிகு பகுதி) என்பார்கள். அதுவரை ஒளி (ஊடுருவி) செல்லும். பிறகு, 200 மீட்டரிலிருந்து 1000 மீட்டர் வரை உள்ள அடுக்கை Dysphotic Zone (கடலின் மங்கொளி பரப்பு) என்பார்கள். அங்கு மங்கலாக இருக்கும். லேசான வெளிச்சம் இருக்கும். ஆனால், ஒரு கிலோ மீட்டருக்குப் பிறகு, முழுவதும் இருளாக இருக்கும்.... அதை Aphotic Zone (ஒளியற்ற பகுதி) என்பார்கள். அல்லாஹ் சூரா அந்நூரில் கூறுகிறான்:

பொருள்: "அல்லது (அவர்களுடைய செயல்கள்) பரந்த ஆழிய கடலில் இருக்கும் காரிருளைப் போன்றதாகும். அதனை ஓர் அலை மூடுகின்றது. அந்த அலையின் மேல் மற்றோர் அலை எழுகின்றது. இந்த அலையின் மேல் மேகங்கள் உள்ளன. இவை ஒன்றன் மீது ஒன்றாகப் படர்ந்திருக்கும் இருள்களாகும்.

இன்று Oxygen Cylinder -இன் உதவியால் நீச்சல் அடிப்பவர்கள் கடல்களின் ஆழம் வரை செல்ல முடியும். இப்போது அவர்கள், ஒரு கி.மீ.-க்குப் பிறகு மனிதனுக்குத் தன் கை கூட தென்படாத அளவுக்கு காரிருள் பரவி இருக்கிறது என்று சாட்சி பகர்கிறார்கள்.

அல்லாஹ் அதிகாரம் அந்நூரிலேயே கூறுகிறான்: "அவன் தன் கையை வெளியில் எடுக்கும்போது அவனால் அதையும் காண முடியாது."

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒருபோதும் கடல்களுக்குள் பயணம் சென்றதில்லை. திருக்குர்ஆன் இறைவனின் கூற்று இல்லையென்றால், எழுதப் படிக்கத் தெரியாத அந்தத் தூதர் (ஸல்) அவர் -களுக்கு கடல்களின் அடுக்குகளில் மறைந்திருக்கும் இரகசியத்தைக் கூறியது யார்?

பிரபஞ்சத்தின் அறிவியல் அல்லது அண்டவியலில் (Cosmology) ஆர்வம் கொண்டுள்ள கல்லூரி மாணவர்கள் இந்த விஷயத்தை அறிவார்கள். கடந்த நூறாண்டுகளில் Edwin Hubble தான் நமது பிரபஞ்சம் விரிவடைகிறது என்பதைக் கண்டுபிடித்தார். அதாவது, அதற்கு ஒரு தொடக்கம் இருக்கிறது. இதன் மூலம் பெருவெடிப்புக் கோட்பாடு (Big Bang Theory) வந்தது. பிறகு, கருந்துளைகள் (Black Holes) கண்டுபிடிக்கப்பட்டன. சூரா அன்பியாவில் அல்லாஹ் இவ்வாறு கூறுவதும் தற்செயலானதா?

اَوَلَمۡ يَرَ الَّذِيۡنَ كَفَرُوۡۤا اَنَّ السَّمٰوٰتِ وَالۡاَرۡضَ كَانَتَا رَتۡقًا فَفَتَقۡنٰهُمَا ؕ

வானங்களும் பூமியுமாகிய இரண்டும் இறுக்கமாக மூடப்பட்டிருந்தன. பின்னர் நாம் அவற்றைப் பிரித்துத் திறந்து விட்டோம் என்பதை நிராகரிப்பாளர்கள் பார்க்க -வில்லையா?

இது மட்டும் அல்ல...... மேலும் கவனம் செலுத்து -வீர்களாயின், மற்றோர் உன்னதமான கருத்து புரிய வருகிறது..... அல்லாஹ் கூறுகிறான்: 'அவலம் யர' அதாவது, அவன் பார்க்கவில்லையா? பத்து ஆண்டு -களுக்கு முன்னால் வரை ஒரு கருந்துளையை (Black Hole)-ஐப் பார்க்க முடியாது. ஏனெனில், ஒளியும் அதிலிருந்து வெளிப்பட முடியாது என்பதே அறிவியல் கண்ணோட்டமாக இருந்து வந்தது.

கடந்த நான்கு ஆண்டுகளில் ஹொரிஸான் தொலைநோக்கி (Event Horizon Telescope) மூலமாக கருந்துளையின் (Black Hole) படங்களை முழு உலகமும் பார்த்துள்ளது. 'அவலம் யர' இவை அனைத்தையும் பார்த்தும் நாம் இறையிருப்பை நிராகரித்து விட வேண்டுமா?

அவன் 1400 ஆண்டுகளுக்கு முன்னர் இந்த இரகசியங்களை அடிக்கோடிட்டுக் காட்டி விட்டான்.

பிள்ளைகள் இளைஞர்கள் ஆகி விட்டாலும் சரி, அவர்கள் திருமணம் செய்து கொண்டாலும் சரி, அல்லாஹ் அவர்களுக்கு சந்ததிகளை வழங்கினாலும் சரி, அப்போதும் திருக்குர்ஆனின் அறிவியல் சான்றுகள் அவர்களுக்கு வழிகாட்டிக் கொண்டே இருக்கின்றன. ஆண் குழந்தை பிறக்க வேண்டும் என்ற ஆசையிலோ தீமை ஏதும் இல்லை.

ஆனால், அல்லாஹ் எந்தத் தாய்மார்களுக்குப் பெண் பிள்ளைகளை மட்டும் வழங்கியுள்ளானோ அவர்களைப் பரிகாசம் செய்வதும், அவர்களுக்குத் துன்பம் தருவதுமான இந்த விஷயம் அநீதியாகும்.

ஆனால், பிறக்கும் குழந்தையின் பாலினம், ஆணின் நுண்ணுயிரிகள் அல்லது நிறப்புரியுடன் (Chromosome) தொடர்புடையது. பெண்ணுக்கோ இதில்



எந்தத் தலையீடும் இல்லை என்பது இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் பல அறிவியல் சோதனைகள் மூலம் நிரூபணமாகி விட்டது. மேற்கத்திய நாடுகளுக்கு இது ஒரு வியப்பூட்டும் அறிவியல் கண்டுபிடிப்பாக இருந்தது.

ஆனால், திருக்குர்ஆனோ 1400 ஆண்டுகளுக்கு முன்னரே அநீதியிழைக்கப்பட்ட இந்தத் தாய்மார்களுக்கு சாதகமாக நின்றது. அல்லாஹ் சூரா அந்நஜ்மில் கூறுகிறான்:

"அவனே விந்திலிருந்து ஆணையும் பெண்ணையும் படைத்தான்." மகள்கள் மீது, மருமகள்கள் மீது, தாய்மார்கள் மீது அநீதியிழைப்பவர்கள் யோசித்துக் கொள்ளுங்கள். அந்த இறைவனக்கே நாம் கணக்கு வழக்குக்குப் பதிலும் சொல்ல வேண்டும்.

இன்னும் எத்தனை உதாரணங்கள் உள்ளன! அங்கு அல்லாஹ் ஒரு விஷயத்தைத் திருக்குர்ஆனில் கூறினான். பல நூறாண்டுகளுக்குப் பிறகு அறிவியல் அதை நிரூபித்தது.

மலைகள் அசையாமல் இல்லை மாறாக, மேகங் -களைப் போன்று மிதந்து கொண்டிருந்தன. (சூரா அந்நமல் வசனம் 87)

நாம் தண்ணீரிலிருந்து உயிருள்ள ஒவ்வொன்றையும் உருவாக்கினோம். (சூரா அல் அன்பியா வசனம் 31)

தோல் எல்லாவற்றையும் விட அதிகம் வேதனையை உணர்கிறது. (சூரா அந்நிஸா வசனம் 57)

கருவியல் அல்லது Embryology-ன் விளக்கம். (சூரா அல் மு.்.மினூன் வசனம் 14)

மரபணு பொறியியல் (Genetic engineering). (சூரா அந்நிஸா வசனம் 120)

புவிஈர்ப்பு விசை (Gravity). (சூரா அர் ர.்.து வசனம் 3)

அமில மழை (Acid Rain). (சூரா அல் வாக்கிஆ வசனம் 71)

நீர் சுழற்சி (water Cycle). (சூரா அஸ் ஸாரியாத் வசனம் 3)

இன்னும் பல வசனங்கள் உள்ளன. அவை பரிணாம கொள்கை அல்லது Evolution-ன் ஒரு பகுதிக்கு ஆதரவளிக்கின்றன. திருக்குர்ஆனோ இறையிருப்புக்கான அறிவியல் சான்றுகளைக் குவித்து வைத்து விட்டது. வானங்களிலும் கடல்களிலும், சூரியனிலும் நிலவிலும் மணலின் துகளிலும்.

உங்களில் துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கான சொந்த அனுபவமுள்ள ஒவ்வோர் அஹ்மதியும் இறையிருப்பிற்கான உயிருள்ள சான்றாவார். ஒவ்வொரு நபியின் ஜமாஅத்தும் இறையிருப்பிற்கான உயிருள்ள சான்றாகும். அது ஒரு குழந்தையைப் போன்று பலவீனமாக இருந்தாலும் உலகின் எல்லா ஆற்றல்களுக்கு எதிராக வெற்றி பெற்று விடுகிறது. பார்க்கக்கூடிய கண் மட்டும் வேண்டும்; இறைவனோ எல்லாப் பக்கமும் இருக்கின்றான்.

وَهُوَ مَعَكُمۡ اَيۡنَ مَا كُنۡتُمۡ‌ؕ பொருள்: நீங்கள் எங்கிருந்தாலும் அவன் உங்களுடன் இருக்கின்றான்.

ஆனால், 25 ஆண்டுகளின் உலகக் கல்விக்குப் பிறகு, நாம் நமது சொந்தக் கதையையே மறக்க ஆரம்பித்து விடுகிறோம். நாம் பெரியவர்களாகி விடுகிறோம் அல்லது நமது அகம்பாவம் பெரியதாகி விடுகிறது என்று சொல்லலாம். பிள்ளை -களைப் போன்று அழுவதற்கு பதிலாக நாம் சற்று பெரியவர்களைப் போன்று வாதம் செய்ய ஆரம்பிக்கிறோம்.



சில இளைஞர்கள் பாதி அறிவியலைப் படித்து விட்டு இப்பொழுது அவர்களுக்குத் தங்கள் உண்மையான படைப்பாளனின் தேவையில்லை என்று நினைக்கிறார்கள்.

இதைப் பற்றி Quantum Physics உடைய ஒரு தோற்றுநர் Werner Heisenberg கூறுகிறார்: "அறிவியல் எனும் குவளையிலிருந்து முதல் மடக்கு அருந்தியதுமே நீங்கள் இறைமறுப்பாளராகி விடுவீர்கள். ஆனால், அதே குவளையின் அடிப்பகுதியில் இறைவன் உங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறான்."

அறிவியலின் முதல் மடக்கை அருந்தி விட்டு சிலர் இந்தப் பிரபஞ்சத்தை இறைவன் படைத்தான் என்றால், அந்த இறைவன் எங்கே இருக்கிறான், அறிவியல் சோதனைப் போன்று ஏன் தென்படுவதில்லை என்று கேட்கிறார்கள். இது எப்படி இருக்கிறது என்றால், ஒரு குழந்தை பிறப்பதற்கு முன் தன் தாயின் வயிற்றில் இருக்கும் போது, தாய் ஏன் கண்ணுக்குத் தெரிவதில்லை என்று ஆட்சேபனை செய்வதைப் போன்றதாகும்.

தாயோ எல்லாப் பக்கமும் இருக்கிறாள். உதாரணமாக, மின்காந்த நிறமாலை (Electromagnetic Spectrum) உடைய கதிர்கள் நமக்கு எல்லாப் பக்கமும் உள்ளன. ஆனால், நம்மால் அதன் ஆயிரம் பங்கில் 996 பகுதிகளைக் காண முடியாது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: "எவர் இறைவனின் தோற்றத்தைக் காண வேண்டுமோ அவர் துஆ செய்ய வேண்டும். இந்தக் கண்களால் அவன் தென்படுவதில்லை. மாறாக, துஆ எனும் கண்களால் அவன் தென்படுகிறான்." (மல்.்.பூஸாத் தொகுதி 3 பக்கம் 618)

சிலர் இவ்வாறும் கூறுகிறார்கள்: 'அல்லாஹ் உலகைப் படைத்தான் என்றால், அல்லாஹ்வைப் படைத்தது யார்?' இது எப்படி இருக்கிறது என்றால், 'ஸாஹித் என்பவர் இந்த அறைக்குப் பெயிண்ட் அடித்தார் என்றால், ஸாஹிதுக்குப் பெயிண்ட் அடித்தவர் யார்?' என்று ஒருவர் கேட்டாராம். வேடிக்கையான விஷயம்.

இதை Category Mistake (வகை ரீதியான தவறு) என்பார்கள். அதாவது, ஒரு விஷயத்தைத் தவறான பிரிவில் வைத்துப் பார்ப்பது. இறைவன் நம்மைப் போன்று பொருள்களால் உருவானவன் அல்ல. அவன் நுட்பமான ஞானமுள்ளவன் ஆவான். இந்த மாபெரும் ஆன்மீக இரகசியத்தை, நம்மால் ஒரு குறுகிய அறிவியல் வட்டத்தில் புரிய முடியாது.

சில இளைஞர்கள் இறைமறுப்பின் பக்கம் செல்வதற்கான காரணம் என்னவென்றால், அவர்களுக்கு இதில் சுதந்திரம் இருப்பதாகத் தெரிகிறது. தொழவும் வேண்டாம்; திருக்குர்ஆனின் தேவையும் இல்லை; பர்தாவைப் பற்றி சிந்திக்க வேண்டியதில்லை; மது அருந்துதலைப் பற்றி கவலைப்படத் தேவையில்லை; என்ன வேண்டுமானாலும் செய்யலாம்.

அவர்கள், நான் பார்க்காத ஒருவனுக்கு ஏன் அடிமையாக இருக்க வேண்டும்; நான் சுதந்திரமானவன் என்று நினைக்கிறார்கள்.

அப்படியா! இது சுதந்திரமா? அல்லது நீங்கள் உலகக் கடவுள்களை வணங்குகிறீர்களா? இறையிருப்பை நிராகரிப்பவர்களோ எல்லாரையும் விடப் பெரிய அடிமைகள் ஆவார்கள். Facebook-ன் likes-க்கு அடிமைகள். YouTube-ன் Views-க்கு அடிமைகள். Retweets-க்கு அடிமைகள். திரைப்பட நடிகர்கள், பாடகர்கள், கலைஞர்களுக்கு அடிமைகள்.

ஹுஸ்ரத் நான்காவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் 27 ஆண்டுகளுக்கு முன்பு இதே ஆண்டு மாநாட்டில் இவ்வாறு கூறினார்கள்:

மனிதன் கண்டிப்பாக யாரையாவது வணங்கியே தீருவான். அவன் இறைவனை வணங்காத போது, இழிவிலும் இழிவானதே அவனுக்கு அன்பிற்குரியதாக இருக்கிறது. இறைவன் மீது உறுதியான நம்பிக்கை கொண்டிருப்பவர்கள் இந்த செயற்கை கடவுள்களை விட்டும் சுதந்திரமாக இருக்கிறார்கள்.

அறிவியல் சான்றுகள் இறைவன் இருக்க வேண்டும் என்ற இடம் வரை நம்மை அழைத்துச் செல்கின்றனதான்; ஆனால், குவளையின் அடிவரை சென்றடைவதற்கு... 'இறைவன் இருக்கிறான்' எனும் இடம் வரை சென்றடைவதற்கு நமக்கு துஆ எனும் அறிவியல் தேவைப்படுகிறது.

ஆம்; நீங்கள் சரியாகத் தான் செவியேற்றீர்கள். ஹுஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் துஆவின் தத்துவத்தை எந்த அளவு எடுத்துக் கூறியுள்ளார்கள் என்றால், அது அந்த அறிவியலையும் விடக் குறைந்ததல்ல.

பாருங்கள்! பார்த்து, சோதனை செய்து, விளைவை எட்டுவதற்குப் பெயர்தான் அறிவியல் ஆகும். அஹ்மதிய்யத்தின் சஹாபா ஹுஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் துஆ ஏற்றுக் கொள்ளப்படுதலின் எண்ணற்ற காட்சிகளைப் பார்த்துள்ளார்கள்; அனுபவித்துள்ளார்கள்.

ஹைதராபாத் டெக்கானைச் சேர்ந்த அப்துல் கரீம் எனும் ஒரு சிறுவர் படிப்பதற்காக காதியானுக்கு வந்தார். வெறிநாய் அவரைக் கடித்ததால் அவருக்கு Rabies நோய் வந்து விட்டது.

காதியானிலிருந்து 300 கி.மீ. தொலைவில் கசௌலி என்ற ஊரில் Rabies நோய்க்கு சிகிச்சை அளிப்பதற்காக Pasteur Center என்ற பிரிசித்தி பெற்ற மருத்துவமனை ஒன்று இருந்தது. அங்கு ஒவ்வோர் ஆண்டும் ஏறக்குறைய 20,000 Rabies நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

அங்கு நோயைக் கண்டறிந்து சிகிச்சை செய்த பிறகும், அப்துல் கரீமிடம் நோயின் அறிகுறிகள் வெளிப்பட்டதும் மீண்டும் சிகிச்சைக்காக Pasteur Center-ஐ அணுகப்பட்டது. அப்போது இவ்வாறு பதில் வந்தது:

"Sorry! Nothing can be done for Abdul Karim" அப்துல் கரீமுக்காக இப்போது ஒன்றும் செய்ய முடியாது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். உலக அறிவியல் கையை விரித்து விட்டது. ஆனால், ஹுஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

அப்போது எனது உள்ளம் அவருக்காக கடுமையான வேதனை கொண்டு நிம்மதியிழந்தது. அன்னாருடைய வேதனைமிக்க துஆக்களால் அப்துல் கரீம் அவர்களை அல்லாஹ் அற்புதமான முறையில் காப்பாற்றியது மட்டுமல்லாமல், மரணத்தின் வாய்க்கு அருகில் நின்று கொண்டிருந்த அப்துல் கரீம் அவர்கள் மேற்கொண்டு 28 ஆண்டுகள் உயிர் வாழ்ந்தார்கள்.

அல்லாஹ் இந்த எளியவனுக்கு 25,000-க்கும் மேற்பட்ட Infectious Disease-ன் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கான நல்வாய்ப்பு வழங்கியுள்ளான். என்னால் இந்தவிஷயத்தை நம்பிக்கையுடன் சொல்ல முடியும். 120 ஆண்டுகள் கழிந்த பிறகும், இன்றும் Rabies நோயால் பாதிக்கப்பட்ட, தடுப்பூசி போடப்படாத நோயாளிக்கு நோயின் அறிகுறிகள் வெளிப்பட்டு விட்டால், நூறு சதவீதம் மரணம் உறுதியாகி விடுகிறது.

(தொடரும்...)



மனிதன் கண்டிப்பாக யாரையாவது வணங்கியே தீருவான். அவன் இறைவனை வணங்காத போது, இழிவிலும் இழிவானதே அவனுக்கு அன்பிற்குரியதாக இருக்கிறது. இறைவன் மீது உறுதியான நம்பிக்கை கொண்டிருப்பவர்கள் இந்த செயற்கை கடவுள்களை விட்டும் சுதந்திரமாக இருக்கிறார்கள்.

அறிவியல் சான்றுகள் இறைவன் இருக்க வேண்டும் என்ற இடம் வரையோ நம்மை அழைத்துச் செல்கின்றனதான். ஆனால், குவளையின் அடி வரை சென்றடைவதற்கு... 'இறைவன் இருக்கிறான்' எனும் இடம் வரை சென்றடைவதற்கு நமக்கு 'துஆ' எனும் அறிவியல் தேவைப்படுகிறது.

# காதியானும் அதன் புனித, வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களும்

**தொகுப்பு: மவ்லானா முஹம்மது ஹமீது கவ்ஸர்**
**[அஹ்மதிய்யத் வரலாற்றுத் துறையின் பொறுப்பாளர், காதியான்]**

6

**தமிழாக்கம்: மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A.,**

## மினாரத்துல் மஸீஹ்



அக்ஸா மஸ்ஜிதுக்கு இன்னொரு பெருமையும், கண்ணியமும் இருக்கிறது. சய்யிதுனா ஹஸ்ரத் முஹம்மது முஸ்த.்.பா (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புக்கேற்ப சய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த மஸ்ஜிதின் வளாகத்தை மினாரத்துல் மஸீஹ் கட்டுவதற்காக தேர்ந்தெடுத்தார்கள். 1903-ஆம் ஆண்டு மார்ச் 13-ஆம் நாள் வெள்ளிக்கிழமை இந்த மஸ்ஜிதின் வளாகத்தில் மினாரத்துல் மஸீஹுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது. சில காரணங்களால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அருளுக்குரிய காலத்தில் இது முழுமை பெற முடியவில்லை.

ஹஸ்ரத் இரண்டாவது கலீ.்.பத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தமது கிலா.்.பத் காலகட்டத்தின் முதல் ஆண்டிலேயே 27, நவம்பர் 1914 அன்று மினாரத்துல் மஸீஹின் முழுமையடையாத கட்டடத்தின் மீது தமது அருளுக்குரிய கையால் செங்கல்லை வைத்து அதன் கட்டுமானப் பணியை மீண்டும் துவக்கினார்கள். 16, பிப்ரவரி 1923 அன்று இது முழுமையை அடைந்தது. மகிழ்வூட்டக் கூடிய, உள்ளத்தை ஈர்க்கின்ற இந்த மினாரா 105 அடி உயரமானது ஆகும். இதற்கு மூன்று மாடிகளும், மேலே குவிமாடமும், 92 ஏணிப்படிகளும் இருக்கின்றன. சய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நீண்ட கால விருப்பத்திற்கு ஏற்ப, மினாராவில் நூறு ரூபாய்களை சந்தாவாகக் கொடுத்திருந்த கலப்பற்றவர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அந்தக் காலத்தில் கட்டடத்தை எழுப்புவதற்காக மட்டும் 5963 ரூபாய் செலவாகியது. சய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மினாரத்துல் மஸீஹ் கட்டப்படும் நேரத்தில் கூறியிருந்த குறிக்கோள்களில் மூன்று கீழே தரப்படுகின்றன:

1. பாங்கு கூறுபவர் இதில் ஏறி ஐந்து நேரமும் பாங்கு கூற வேண்டும். மேலும் لا اله الا الله (லா இலாஹ இல்லல்லாஹ்) என்ற ஓசை ஒவ்வொரு காது வரை சென்றடைய வேண்டும்.

2. வானத்தின் ஒளியின் காலம் வந்து விட்டது என மக்கள் தெரிந்து கொள்வதற்காக இந்த மினாராவில் ஒரு விளக்கு பொருத்தப்பட வேண்டும்.

3. மனிதன் தனது நேரத்தை தெரிந்து கொள்வதன் பக்கமும், மனிதர்களுக்கு தனது காலத்தை அடையாளம் கண்டு கொள்வதன் பக்கம் கவனம் ஏற்படுவதற்காகவும், வானத்தின் கதவுகள் திறக்கும் நேரம் வந்து விட்டது என்பதை மக்கள் புரிந்து கொள்வதற்காகவும் இந்த மினாராவில் ஒரு பெரிய கடிகாரம் பொருத்தப்பட வேண்டும்.

அல்லாஹ்வின் அருளாலும், கருணையாலும் இந்த மினாரா அது முழுமை அடைந்த நாளிலிருந்து இன்று வரை கட்டப்பட்டதன் தனது குறிக்கோள்களை முழுமை செய்து கொண்டிருக்கிறது. மேலும் மறுமை வரை முழுமை செய்து கொண்டிருக்கும் - இன்ஷா அல்லாஹ்.

## பெஹஷ்தி மக்பரா

காதியானின் புனித இடங்களில் மிகவும் முக்கியமான இடம் பெஹஷ்தி மக்பரா ஆகும். அங்கு சய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அருளுக்குரிய உடல் 27, மே 1908 அன்று மாலை 6.00 மணி அளவில் கண்ணீர் மல்கும் கண்களுடன் புனித மண்ணில் ஒப்படைக்கப்பட்டது. மேலும் இந்த மண்ணறையின் மண்தான் ஹுஸூர் (அலை) அவர்களுக்கு கஷ்.்.ப் (ஆன்மீகக்) காட்சியில் வெள்ளியாக காட்டப்பட்டிருந்தது. மேலும் அதைப் பற்றி ஹுஸூர் (அலை) அவர்களுக்கு, இது ஜமாஅத்தின் சுவர்க்கத்திற்குரியவர்களாக இருக்கின்ற தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் மண்ணறைகளாகும் என்ற நற்செய்தி வழங்கப்பட்டிருந்தது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மண்ணறையில் துஆ செய்ய வேண்டும் என்பது ஒவ்வோர் அஹ்மதியின் மனமார்ந்த விருப்பமாகவும், துடிப்பாகவும் இருக்கின்றது. மேலும் நாங்கள் என்ன துஆ செய்வது என்று புதிதாக பைஅத் செய்தவர்கள் கேள்வி கேட்கின்றனர். அவர்களுக்கு தெரியப்படுத்துவதற்காக எழுதுவது என்னவெனில், சுன்னத்தான வழிமுறைக்கு ஏற்ப துஆ செய்வதற்கு கையை உயர்த்துங்கள். மேலும் முதன் முதலில் சூரா .்.பாத்திஹா மற்றும் தருது ஷரீ.்.ப் (அதாவது ஸலவாத்) ஓதுங்கள். அதற்குப் பிறகு உங்கள் மொழியில் கீழ்வரும் துஆக்களைக் கேளுங்கள்:

ஹஸ்ரத் சய்யிதுனா முஹம்மது முஸ்த.்.பா (ஸல்) அவர்கள் தமது உம்மத்தின் நபர்களுக்கு இவ்வாறு கட்டளையிட்டார்கள்:

مَنْ أَدْرَكَ مِنْكُمْ عِيْسَى ابْنَ مَرْيَمَ فَلْيُقْرِئْهُ مِنِّي السَّلَامَ (மன் அத்ரக மின்கும் ஈஸப்ன மர்யம .்.பல் யக்ர.்.ஹு மின்னிஸ் ஸலாம்)

பொருள்: ‘உங்களில் எவர் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைக் காண்பாரோ, அவர் அவருக்கு எனது சலாத்தை எட்ட வைக்கட்டும்.’

(துர்ரே மன்ஸூர் அறிவிப்பாளர்: அனஸ் (ரலி) அவர்கள், தொகுதி 6 பக்கம் 743)

எனவே பெஹஷ்தி மக்பராவில் இவ்வாறு துஆ செய்ய வேண்டும்:

அல்லாஹ்வே! இன்று நாங்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மண்ணறையில் நிற்கின்றோம். எங்கள் சார்பாக ஹஸ்ரத் முஹம்மது முஸ்த.்பா (ஸல்) அவர்களின் சலாத்தை அவர்கள் வரை சென்றடைய வைப்பாயாக.

அல்லாஹ்வே! இஸ்லாத்தை உயிரூட்டுவதற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எந்த (அஹ்மதிய்யா) ஜமாஅத்திற்கு அடித்தளம் இட்டார்களோ, திருக்குர்ஆன், ஹதீஸ்களின் எந்த போதனைகளை அவர்கள் உலகிற்கு முன்னால் எடுத்து வைத்தார்களோ அதை அதிகமதிகமாக ஏற்றுக் கொள்ளும் நல்வாய்ப்பை மக்களுக்கு வழங்குவாயாக. எனக்கும், எனது சந்ததிகளுக்கும், ஜமாஅத்தின் அனைத்து நபர்களுக்கும் அந்த போதனை -களின்படி செயல்படும் நல்வாய்ப்பை வழங்குவாயாக.



இடமிருந்து வலம்: முதல் கலீஃபத்துல் மஸீஹ் மண்ணறை, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) மண்ணறை, ஹஸ்ரத் அம்மாஜான் அவர்களின் மண்ணறைக்காக ஒதுக்கப்பட்ட இடம்

அல்லாஹ்வே! ஹஸ்ரத் மவ்லானா நூருத்தீன் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்குக் கட்டுப்பட்டு நடக்கும் நல்வாய்ப்பு கிடைத்தது போன்று எங்களுக்கு காலத்தின் கலீ.்பா அவர்களுக்குக் கட்டுப்பட்டு நடக்கும் நல்வாய்ப்பை வழங்குவாயாக. எங்களின் தற்போதைய இமாம் அய்யதஹுல்லாஹுத் தஆலா அவர்களுக்கு ரூஹுல் குத்ஸ் (எனும் பரிசுத்த ஆவியின்) மூலமாக ஆதரவும், உதவியும் அளித்துக் கொண்டே செல்வாயாக.

எங்கள் இறைவா! இந்த மண்ணறையில் அடங்கி இருப்பவர்களையும், முழு உலகிலுள்ள வஸிய்யத் செய்தவர்களுக்கும் உனது அருள்களை இறக்குவாயாக. மேலும் எங்களுக்கும் இந்த அருளுக்குரிய (வஸிய்யத்) அமைப்பில் இணையும் நல்வாய்ப்பை வழங்குவாயாக.

இதற்குப் பிறகு உங்களுக்கும் உங்களின் உறவினர் -களின் மக்.்பிரத்திற்காகவும் (மன்னிப்பிற்காகவும்) இன்ன பிற விஷயங்களுக்காகவும் அல்லாஹ்விடம் துஆக்களை செய்யலாம். அல்லாஹ் அனைவரின் துஆக்களை ஒப்புக் கொள்வானாக. ஆமீன்!

## பெஹஷ்தி மக்பராவின் சுற்றுப்புறத்தில் இருக்கும் புனித இடங்கள்

பெஹஷ்தி மக்பராவின் சுற்றுப்புறத்தில் இருக்கும் தற்போதைய சுற்றளவு ஏறக்குறைய 17 ஏக்கர் ஆகும். இது சய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் முன்னோர்களின் தோட்டமாக இருந்தது. பின்னர் இன்னும் கொஞ்சம் நிலத்தை வாங்கி இதன் சுற்றுப்புறம் விரிவுபடுத்தப்பட்டது. பெஹஷ்தி மக்பராவில் முதன் முதலில் ஹஸ்ரத் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் (ரலி) அவர்கள் அடக்கம் செய்யப்பட்டார்கள். மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் (ரலி) அவர்கள் 11, அக்டோபர் 1905 அன்று ளுஹ்ர் தொழுகைக்குப் பிறகு காதியானில் மரணமடைந்து விட்டார்கள். அந்த நாளிலேயே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அவர்களின் ஜனாஸா தொழுகையை தொழ வைத்தார்கள். மேலும் குடியிருப்பு பகுதிக்கு கிழக்குத் திசையில் குளத்திற்கு அருகில் அமைந்திருக்கின்ற பொதுவான கபருஸ்தானில் அமானிதமாக அவர்கள் அடக்கம் செய்யப்பட்டிருந்தார்கள்.

26, டிசம்பர் அன்று ளுஹ்ர், அஸ்ர் தொழுகைக்குப் பிறகு அவர்களின் அடக்கம் செய்யப்பட்ட பெட்டி மண்ணறையிலிருந்து வெளியே எடுக்கப்பட்டது. மேலும் 27, டிசம்பர் அன்று சுமார் 10.00 மணிக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு பெரும் மக்கள் கூட்டத்துடன் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் (ரலி) அவர்களின் ஜனாஸா தொழுகையை நிறைவேற்றினார்கள். பின்னர் பெஹஷ்தி மக்பராவில் அடக்கம் செய்யப்பட்டார்கள். பெஹஷ்தி மக்பராவில் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் (ரலி) அவர்களின் மண்ணறை முதல் முதலான மண்ணறையாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மரணம் 26, மே 1908 அன்று லாஹூரில் நிகழ்ந்தது. 27, மே அன்று அவர்கள் பெஹஷ்தி மக்பராவில் அடக்கம் செய்யப்பட்டார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வலப் பக்கம் (அதாவது மேற்கு திசையில்) ஹஸ்ரத் மவ்லானா நூருத்தீன் சாஹிப் (ரலி) அவர்களின் மண்ணறை இருக்கிறது. மேலும் இடப் பக்கம் (அதாவது கிழக்கு திசையில்) இடம் வெற்றிடமாக இருக்கிறது. அது ஹஸ்ரத் உம்முல் மு.்மினீன் சய்யிதா நுஸ்ரத் ஜஹான் பேகம் சாஹிபா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்களை அடக்கம் செய்வதற்காக வெற்றிடமாக வைக்கப் -பட்டுள்ளது. ஹஸ்ரத் உம்முல் மு.்மினீன் சய்யிதா நுஸ்ரத் ஜஹான் பேகம் சாஹிபா (ரலி) அவர்களின் மரணம் 1952-ஆம் ஆண்டு ஏப்ரல் 20, 21 ஆகிய தேதியின் இடைப்பட்ட இரவில் ரப்வாவில் ஏற்பட்டது. ‘அவர்கள் (ரப்வாவிலுள்ள) பெஹஷ்தி மக்பராவில் அமானிதமாக அடக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். ‘என்னை இங்கே வைக்க வேண்டாம்; என்னை கண்டிப்பாக காதியான் கொண்டு சேர்த்து விட வேண்டும்’ என்று அவர்கள் உயில் எழுதிச் சென்றுள்ளார்கள். (தாரீகே அஹ்மதிய்யத் தொகுதி 15 பக்கம் 115 காதியான் பதிப்பு 2007)

மர்ஹூமா நுஸ்ரத் ஜஹான் பேகம் சாஹிபா (ரலி) அவர்களின் உயிலுக்கேற்ப ஜமாஅத் இந்த அமானிதத்தை அவர்கள் உயில் செய்து வைத்த இடத்தில் அடக்கம் செய்யும் நல்வாய்ப்பு கிடைக்கும் அந்த நாள் வெகு விரைவில் வருவதற்கு ஜமாஅத் சகோதரர்கள் தொடர்ந்து துஆ செய்து வர வேண்டும்.

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முன்னேற்றத்துடன் அதன் எதிர்ப்பும் அதிகமாவது ஒரு கட்டாய விஷயமாக இருந்தது; இருக்கவும் செய்கிறது. இதன் விளைவாக இனிமேல் எப்போதாவது அபாயத்திற்குள்ளாகின்ற நிலைமைகளும் வருவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. சில அறிவில்லாத எதிரிகள் மண்ணறைகளை இழிவுபடுத்த முயற்சி செய்ய சாத்தியமிருக்கிறது. எனவே 1925-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மண்ணறைகள் மற்றும் மற்ற சில சஹாபிகளின் மண்ணறைகளைச் சுற்றி நான்கு சுவர்கள் எழுப்பப்பட்டன. இன்னொரு பக்கம் குறைவான தர்பிய்யத்தைப் பெற்றவர்கள், ஜமாஅத்தைச் சேராத நண்பர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மண்ணறை மீது பூக்களை இடுவதையும், இன்னும் சில ஷிர்க்கான வழிமுறையை மேற்கொள்ளவும் துவங்கினர். அவர்களை இந்த வழிமுறையிலிருந்து தடுத்து வைப்பதற்-காகவும் நான்கு சுவர்களை எழுப்புவது அவசியமாகக் கருதப்பட்டது.

1957-1958-ஆம் ஆண்டுகளில் பெஹஷ்தி மக்பராவின் பரந்த நிலப்பரப்பைச் சுற்றிலும் உறுதியான நான்கு சுவர்கள் எழுப்பப்பட்டன. அதன் அதிகமான பகுதியை காதியானிலுள்ள தர்வேஷ்கள் வகாரே அமல் மூலமாக கட்டினார்கள். فَجَزَاهُمُ اللهُ أَحْسَنَ الْجَزَاء (ஃபஜஸாஹுமுல்லாஹு அஹ்ஸனல் ஜஸா - அல்லாஹ் அவர்களுக்கு மிக அழகிய நற்கூலியை வழங்குவானாக).

### ஹஸ்ரத் அம்மா ஜான் ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் வீடு

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் புனிதமான மண்ணறையிலிருந்து நாம் மேற்கு பக்கம் நோக்கி செல்லும்போது முன்னால் ஒரு வீடு தென்படும். இந்த வீடு, 'ஹஸ்ரத் அம்மா ஜான் ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் வீடு' என அழைக்கப்படுகிறது. மேலும் இது தாருல் வாகிஃபீன் (வாழ்க்கையை அர்ப்பணம் செய்தவர்களின் வீடு) என்றும் அழைக்கப்படுகிறது. சய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் புனித உடல் லாஹூரிலிருந்து காதியான் கொண்டு வரப்பட்டு 27 மே 1908 அன்று இந்த வீட்டின் நடுப் பகுதியில்தான் வைக்கப்-பட்டிருந்தது. மேலும் இந்த அறையிலேயே சகோதரர்கள் தமது எஜமானர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் புனித உடலைப் பார்ப்பதற்கான நற்பேற்றைப் பெற்றார்கள். இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க அறையையும் (தற்போது மக்கள்) பார்க்கலாம்.



ஹஸ்ரத் அம்மா ஜான் (ரழி) அவர்களின் வீடு

குறிப்பு: நூலாசிரியராகிய முஹம்மது ஹமீது கவ்ஸர் ஆகிய நான் எழுதுவது என்னவெனில், இந்த அறையின் வட கிழக்குப் பகுதியின் மூலையில் ஒரு குளியல் அறை இருந்தது. அதன் கீழ்தளத்தில் தண்ணீர் ஊற்றும் வழி வெளிப்புறத்தை நோக்கி உருவாக்கப்பட்டிருந்தது. 1960-ஆண்டில் நடந்த சம்பவம் என்னவெனில், ஹஸ்ரத் பாயி அப்துர் ரஹ்மான் காதியானி (ரலி) அவர்கள் பாகிஸ்தானிலிருந்து வந்திருந்த சில விருந்தினர்களிடம் இவ்வாறு கூறுவதைப் பார்த்தேன். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தில் ஒருமுறை அதிகாலையில் கிணற்றிலிருந்து (தோலினால் ஆன) வாளியில் ஹுஸூர் (அலை) அவர்கள் தண்ணீர் கொண்டு வந்து அந்த கீழ் தளத்தில் ஊற்றிக் கொண்டிருந்ததை நான் பார்த்தேன். ஹஸ்ரத் பாயீ அப்துர் ரஹ்மான் காதியானீ (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் ஹுஸூர் (அலை) அவர்களின் கையிலிருந்து சீக்கிரமாக அந்த வாளியை வாங்கிக் கொண்டேன். பின்னர் நான் தண்ணீர் கொண்டு வந்து ஊற்றினேன். அதிகாலையில் ஹுஸூர் (அலை) அவர்கள் தனது எந்தத் தொண்டருக்கும் தண்ணீர் கொண்டு வரும் துன்பத்தைக் கொடுக்க விரும்பவில்லை.

### ஷஹ் நஷீன் (மன்னர் அமருமிடம்)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது தோட்டத்தில் சஹாபிகளுடன் வரும்போது இந்த அமரும் அறையில் அமருவார்கள். மேலும் மஜ்லிஸே இல்ம், மஜ்லிஸே இர்ஃபான் (கேள்வி பதில் நிகழ்ச்சி) நடைபெறும். மேலும் அத்துடன் வருகை தந்தவர்களுக்கு காலச் சூழ்நிலைக்கேற்ப புத்தம் புதிய கனிகளால் விருந்தோம்பலும் அவர்கள் செய்து வந்தார்கள். 1972-ஆம் ஆண்டு இந்த இடத்தில் ஓர் உறுதியான அறை கட்டப்பட்டிருந்தது. மேலும் ஹுஸூர் (அலை) அவர்கள் அமரும் இடத்தை தெளிவாகத்



ஷஹ் நஷீன்

தெரிகிற அளவுக்கு ஆக்கப்பட்டிருந்தது. ஹஸ்ரத் ஐந்தாவது கலீ.்.பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களின் வழிகாட்டலுக்கு ஏற்ப 2015-ஆம் ஆண்டின் துவக்கத்தில் முந்தைய அறையை இடித்து விட்டு அழகிய காற்றுள்ள அறை கட்டப்பட்டு விட்டது.

### ஜனாஸா தொழுகை நடைபெற்ற இடம்

இந்தத் தோட்டத்திலேயே ஜமாஅத்தின் சகோதரர்கள் 27, மே 1908 அன்று ஹஸ்ரத் முதலாவது கலீ.்.பத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் இமாமத்தில் அவர்களைப் பின்பற்றியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜனாஸா தொழுகையை தொழ வைத்த அந்த நினைவுக்குரிய இடமும், புனித இடமும் இருக்கிறது.

### இரண்டாவது வல்லமை வெளிப்பட்ட இடம்

ஜனாஸாவுக்கான இடத்திற்கு அருகிலேயே ஜமாஅத்தின் நபர்கள் ஹிஜ்ரி 1326-ஆம் ஆண்டு ரபீவுல் அவ்வல் 25-ஆம் நாள் அதாவது கி. பி. 1908-ஆம் ஆண்டு மே மாதம் 27-ஆம் நாள் அன்று ஹஸ்ரத் மவ்லானா நூருத்தீன் (ரலி) அவர்களை ஒருமனதாக சய்யிதுனா ஹஸ்ரத்



வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் முதல் கலீ.்.பாவாக ஒப்புக் கொண்டவாறு அவர்களின் கையில் பைஅத் செய்தார்கள். மேலும் அது இரண்டாவது வல்லமை வெளிப்பட்ட இடம் என்று அழைக்கப்படுகிறது. (முதலாவது வல்லமை என்ற மரபுத் தொடர் நுபுவ்வத்திற்காகவும், இரண்டாவது வல்லமை என்ற மரபுத் தொடர் கிலா.்.பத்திற்காகவும் பயன்படுத்தப்படுகிறது - நூலாசிரியர்) அதாவது இந்த இடத்திலிருந்தே அஹ்மதிய்யா ஜமாஅத்தில் ‘கிலா.்.பத்’ என்பதன் துவக்கம் நடைபெற்றது. அது மறுமை வரை தொடர்ந்து கொண்டிருக்கும் - இன்ஷா அல்லாஹ்.

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் நூற்றாண்டு விழா சம்பவத்தின்போது இரண்டாவது வல்லமை நிகழ்ந்த இடத்தில் நினைவுச் சின்னம் கட்டுவதற்காக 2008-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2-ஆம் நாள் அன்று காலை 11.00 மணியளவில் அடிக்கல் வைக்கப்பட்டது. 2008-ஆம் ஆண்டு மே மாதம் 27-ஆம் நாள் அன்று ஜமாஅத் சகோதரர்கள் இங்கு அமர்ந்து இலண்டனிலிருந்து M.T.A மூலமாக ஒளிபரப்பான ஹஸ்ரத் ஐந்தாவது கலீ.்.பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களின் சொற்பொழிவைக் கேட்டனர். மேலும் முழு உலகின் மூலை முடுக்குகளிலும் வாழும் ஜமாஅத்தின் சகோதரர்கள் அதை M.T.A மூலமாகக் கண்டனர்.

## சில நினைவுக்குரிய இடங்களும் வரலாற்றுச் சிறப்புள்ள இடங்களும்

### வட்டமான அறை

முபாரக் மஸ்ஜிதின் கிழக்குத் திசையில் பெரிய ஏணிப்படிகளின் மூலமாக மேலே சென்றால், வலப் பக்கம் ஒரு வட்டமான அறை தென்படும். வரலாற்றுச் சிறப்புள்ள இந்த அறையைப் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

“வட்டமான அறையை நான் உருவாக்கினேன்; எனது சகோதரர் உருவாக்கவில்லை. எனது சகோதரர் உயிருடன் இருக்கும்போது நானே உருவாக்கினேன். அப்போது அவர் கடுமையாக நோயுற்றிருந்தார். மேலும் அவர் அந்த நோயில் இருந்தே உயிர் பிழைக்கவும் முடியாதிருந்தது.” (அல்ஹகம் 31, ஜூலை 1901 பக்கம் 7)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சகோதரர் மிர்ஸா குலாம் காதிர் சாஹிப் அவர்கள் 1883-ஆம் ஆண்டு காலமானார்கள் என்று சீரத்துல் மஹ்தி நூலின் ஓர் அறிவிப்பிலிருந்து தெரிய வருகிறது. (சீரத்துல் மஹ்தி தொகுதி 1 பக்கம் 51 ரிவாயத் எண்: 69)

எனவே வட்டமான அறை 1883-ஆம் ஆண்டு அல்லது அதற்கு முன்பு கட்டப்பட்டு விட்டது என்பது நிரூபண-மாகின்றது. இந்த அறை முதலில் விருந்தினர் அறையாக பயன்படுத்தப்பட்டு வந்தது. மேலும் இந்த இடத்திலேயே விருந்தினர்களுக்கு உணவு வழங்கப்பட்டு வந்தது. மேலும் நூல்களை எழுதுபவர் இந்த இடத்திலேயே பிரதிகளின் குறிப்புகளை எழுதி வந்தார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த இடத்திலேயே சகோதரர்களைச் சந்தித்து வந்தார்கள். 1893-ஆம் ஆண்டு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ‘ஆயினயே கமாலாத்தே இஸ்லாம்’ என்ற நூலை எழுத விரும்பியபோது ‘ரியாஸ் ஹிந்து’ அச்சகத்தின் உரிமையாள-ராகிய ஷேக் நூர் அஹ்மது சாஹிப் அவர்களை அமிர்தசரஸிலிருந்து தனது அச்சகத்தை காதியான் கொண்டு வருமாறு கூறினார்கள். அதன்படி, அவர் அமிர்தசரஸிலிருந்து தனது அச்சகத்தை காதியான் கொண்டு வந்தார்கள். மேலும் அதை வட்டமான அறையில் நிலைநாட்டி விட்டார்கள். (தாரீகே அஹ்மதிய்யத் தொகுதி 1 பக்கம் 472)

இதற்குப் பிறகு இந்த அச்சகம் இன்னோரிடத்திற்கு மாற்றப்பட்டு விட்டது. மேலும் 1895-ஆம் ஆண்டில் ஹஸ்ரத் மீர் நாஸிர் நவாப் சாஹிப் (ரலி) அவர்கள் ஓய்வூதியம் பெற்று வந்து விட்டார்கள். அந்த நேரத்தில் அவர்கள் வட்டமான அறைக்கு முன்னால் சுவரை உருவாக்கி திரையிட்டு விட்டார்கள். மேலும் அதிலேயே தனது தங்குமிடத்தை வைத்துக் கொண்டார்கள். (சீரத்துல் மஹ்தி தொகுதி 3 பக்கம் 126) வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த இடத்தையும் சகோதரர்கள் பார்க்கலாம்.

சுவர்

சய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நிலைநாட்டிய ஜமாஅத் முன்னேற்றம் அடையத் துவங்கியபோது, இப்லீஸிய ஆற்றல்கள் அதை எப்படி தாங்கிக் கொள்ள முடியும்? அவர்கள் தமது ஆற்றலில் இருந்த எதிர்ப்பின் ஒவ்வொரு வழியையும் மேற்கொண்டனர். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சிறிய தந்தையின் சகோதரர் மிர்ஸா இமாமுத்தீன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு தொல்லை கொடுப்பதற்காகவும், குழப்பத்தை உருவாக்குவதற்காகவும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வீட்டிற்கு முன்னால் 1900-ஆம் ஆண்டு ஜனவரி 5 அன்று ஒரு சுவற்றை உருவாக்கத் துவங்கினார். அது 8 அடி உயரமும், 10 அடி நீளமும் 2.5 அடி அகலமும் கொண்டதாக இருந்தது. இந்தச் சுவர் முபாரக் மஸ்ஜிதின் தெற்குப் புறத்தில் கிழக்கும், மேற்குமாக இருந்தது. 7, ஜனவரி அன்று துன்பம் தரும் இந்த சுவர் முழுமையடைந்து விட்டது.

மேலும் துவக்கத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மிர்ஸா இமாமுத்தீன் பக்கம் நம்பத்தகுந்த பிரபலமான நபர்களை அனுப்பினார்கள். ஆனால் அவர் எவ்விதத்திலும் அந்தச் சுவரை இடிக்க ஆயத்தமாகவில்லை. பின்னர் மாவட்ட நிர்வாகத்தின் பக்கம் கவனம் செலுத்தப்பட்டது. அங்கும் துணைக் கமிஷனரின் நடவடிக்கை பகைமை கொண்டதாக இருந்தது. இறுதியில் கட்டாய நிலைமைக்குள்ளாகி கீழமை நீதிமன்றத்தில் வாதாடப்பட்டது. 1901-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 12-ஆம் நாள் சுவரை உடைப்பதற்கான தீர்ப்பை நீதிமன்றம் கொடுத்தது. மேலும் ஆகஸ்டு 20-ஆம் நாள் மாலை 4.00 மணிக்கு எந்த கொத்தனார் மூலமாக இமாமுத்தீன் அந்த சுவரைக் கட்டியிருந்தாரோ அவரே அந்தச் சுவரை இடிக்க வேண்டியது ஏற்பட்டது. இது தொடர்பாக சய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு எழுதுகிறார்கள்:

“நிச்சயமாக வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு விடும் என்று எதிரிகள் வாதிட்டுக் கூறியிருந்த அந்த நேரத்தில் இந்த முன்னறிவிப்பு செய்யப்பட்டிருந்தது. மேலும் என்னைப் பற்றி, நாங்கள் அவர்களின் வீட்டின் எல்லா வாசல்களின் முன்னால் சுவரை எழுப்பி அவர்கள் சிறைக்குள் வீழ்ந்து கிடக்கும் அளவுக்கு அவர்களுக்கு நாங்கள் துன்பம் கொடுப்போம் என்று கூறிக் கொண்டிருந்தனர். மேலும் நான் தற்போது எழுதியிருப்பதைப் போன்று, இறைவன் இந்த முன்னறிவிப்பில், நான் எத்தகைய விஷயத்தை வெளிப்படுத்துவேன் என்றால், அதன் மூலம் வெற்றி கொள்ளப்பட்டவர் வெற்றி பெற்றவராகவும், வெற்றி பெற்றவர் வெற்றி கொள்ளப்பட்டவ -ராகவும் ஆகி விடுவார் என்று செய்தி தெரிவித்தான்............”

“பின்னர் தீர்ப்புக்கான நாள் வந்தது. இன்று வழக்கு தள்ளுபடி செய்வதற்கான கட்டளை கூறப்படும் என்று நினைத்து அந்த நாளில் நமது எதிரிகள் மிகவும் மகிழ்ச்சி அடைந்திருந்தனர். மேலும் இன்றிலிருந்து எல்லா வகையான துன்பமும் கொடுக்கும் வாய்ப்பு கையில் கிடைத்து விடும் என்று கூறி வந்தனர். அந்த நாளில்தான், ‘அது ஒரு மறைமுகமான விஷயமாகும். அதன் மூலம் வழக்கு நேர் எதிராக திரும்பி விடும்; மேலும் இறுதியில் அது வெளிப்படுத்தப்படும்’ என்ற முன்னறிவிப்பிலுள்ள அந்தக் கூற்றின் பொருள் தெளிவாகவிருந்தது.

எனவே என்ன நடந்ததென்றால், பழைய வழக்குப் பதிவேட்டின் அட்டவணையைப் பார்க்க வேண்டும் என்று நமது வழக்கறிஞர் காஜா கமாலுத்தீன் சாஹிப் அவர்களுக்கு தோன்றியது. அதாவது அவசியமான கட்டளைகளின் சுருக்கம் இருக்கின்ற இணைப்பு பார்க்கப்பட்டபோது அதில் வெளிவருவதற்கான நம்பிக்கை இல்லாதிருந்த ஒரு விஷயம் வெளிப்பட்டது. அதாவது அந்த நிலத்திற்கு உரிமை பெற்றவர் இமாமுத்தீன் மட்டுமல்ல. மாறாக, எனது தந்தை மிர்ஸா குலாம் முர்தஸா அவர்களும் ஆவார்கள் என்ற தீர்ப்பளித்தவரின் உண்மைப்படுத்தப்பட்ட தீர்ப்பு கிடைத்தது. அப்போது அதைப் பார்த்ததால் எனது வழக்கறிஞர் நமது வழக்கு வெற்றி பெற்று விட்டது என்று புரிந்து விட்டார். நீதிபதியிடம் இந்தக் கூற்று எடுத்துரைக்கப்பட்டபோது அவர் உடனே அந்த பதிவேட்டைக் கேட்டார். மேலும் அவர் அதைப் பார்த்ததுமே அவருக்கு உண்மை தெளிவாகி விட்டது. எனவே அவர் தாமதமின்றி நிலம் தொடர்பாக இமாமுத்தீனுக்கு எதிராக தீர்ப்பு வழங்கியதுடன் சுவரை இடித்ததற்கான செலவையும் கொடுக்குமாறு கட்டளையிட்டார்.” (ஹகீகத்துல் வஹீ, ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 283)

சுவர் எழுப்பப்பட்டிருந்த அந்த இடத்தை இன்றும் பார்க்கலாம். மேலும் அது நமது ஈமானுக்கு ஒளியூட்டலாம். சுவரை எழுப்பியவர்கள் எங்கே சென்றனர்? மேலும் எவர்களை தடுப்பதற்காக உருவாக்கப்பட்டதோ அவர்களோ முழு உலகிலும் பரவி விட்டனர்; இன்னும் பரவிக் கொண்டும், மலர்ந்து கொண்டும் இருக்கின்றனர்.- اَلْحَمْدُ لِلّٰہِ عَلٰی ذٰلِکَ

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் குடும்பத்தாரின் முன்னோர்களின் கபர்ஸ்தான்

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பழைய முன்னோர்களுடைய குடும்பத்தாரின் கபர்ஸ்தான் காதியானின் மேற்குத் திசையில் இருக்கிறது. இந்த கபர்ஸ்தானில் ஹுஸூர் (அலை) அவர்களின் தாயார் மர்ஹூமா ஹஸ்ரத் சிராக் பீபீ சாஹிபா அவர்களின் மண்ணறை இருக்கிறது. அவர்கள் 1868-ஆம் ஆண்டு மரணமடைந்தார்கள். ஹுஸூர் (அலை) அவர்கள் தம் தாயார் அவர்களைப் பற்றிக் குறிப்பிடும்போதெல்லாம் அவர்களின் கண்களிலிருந்து கண்ணீர் வழியத் துவங்கியது. ஹஸ்ரத் ஷேக் ய.்.கூப் அலி இர்.்.பானீ (ரலி) அவர்கள் கண்ணால் கண்ட காட்சியைப் பற்றிக் கூறியதாவது, ஹுஸூர் (அலை) அவர்கள் ஒருமுறை உலாவச் செல்வதற்காக தமது பழைய குடும்பத்தாருடைய கபர்ஸ்தான் பக்கம் சென்று விட்டார்கள். வழியிலிருந்து விலகி ஹுஸூர் (அலை) அவர்கள் ஒரு மனவெழுச்சியுடன் தமது தாயார் சாஹிபா அவர்களின் மண்ணறையின் பக்கம் வந்தார்கள். மேலும் தமது தொண்டர்களுடன் நீண்ட துஆ செய்தார்கள். மேலும் கண்களில் கண்ணீர் நிரம்பி விட்டது. (ஹயாத்தே அஹ்மது தொகுதி 2 பக்கம் 221 ரப்வா பதிப்பு ஆண்டு 2013)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தந்தை மற்றும் பாட்டனார் ஆகியோரின் பார்வையில் இந்த கபர்ஸ்தானுக்கு எந்த அளவுக்கு

முக்கியத்துவம் இருந்ததென்றால், ஹுஸூர் (அலை) அவர்களின் முப்பாட்டனார் மிர்ஸா அத்தா முஹம்மது சாஹிப் பேகுவால், கபூர்தலா பிரதேசத்தில் தஞ்சமடைந்திருந்தார்கள். மேலும் அங்கு 1814-ஆம் ஆண்டில் அவர்கள் மரணமடைந்து விட்டார்கள். ஹுஸூர் (அலை) அவர்களின் தந்தை ஹஸ்ரத் மிர்ஸா குலாம் முர்தஸா சாஹிப் அவர்கள் (மிர்ஸா அத்தா முஹம்மது சாஹிப்) அவர்களின் ஜனாஸாவை தமது முன்னோரின் கபர்ஸ்தானில் அடக்கம் செய்வதற்காக இரவோடு இரவாக காதியான் கொண்டு வந்தார்கள். மேலும் சீக்கியர்களின் துன்பம் இருந்ததாலும் (மிர்ஸா அத்தா முஹம்மது சாஹிப்) அவர்களை மிகவும் தைரியமாக தனது குடும்ப கபர்ஸ்தானில் அடக்கம் செய்தார்கள். (ஹயாத்தே தய்யிபா பக்கம் 7)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதுகிறார்கள்:

“காதியானில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் குடும்பத்திலுள்ள நபர்கள் அடக்கம் செய்யப்பட்டு வந்து கொண்டிருக்கின்ற கபர்ஸ்தான் உள்ளூர் பெருநாள் தொழும் திடலுக்கு அருகில் இருக்கிறது. இது காதியானுக்கு மேற்குத் திசையில் அமைந்திருக்கின்ற ஒரு பரந்த கபர்ஸ்தான் ஆகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் குடும்பத்திலுள்ள நபர்களின் மண்ணறைகளைப் பற்றி எனக்குத் தெரிந்த வரை, (அதாவது ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் ரலியல்லாஹு அவர்கள் கூறுகிறார்கள். தமக்குத் தெரிந்த வரை) அவர்களுடைய (மண்ணறைகள்) சிலவற்றின் வரைபடம் கீழே இருக்கின்றன. இந்த வரைபடத்தில் ஏழ்மையான தன்மையுடைய பெரியவராகிய ஷாஹ் அப்துல்லாஹ் சாஹிப் காஸீ அவர்களின் மண்ணறையும் காட்டப்பட்டிருக்கிறது. எனக்கு இந்தத் தகவல் அந்த கபர்ஸ்தானின் வறியவர் சண்டு ஷாஹ் அவர்களிடமிருந்து பொது அதிகாரி மர்ஹூம் ஷேக் நூர் முஹம்மது அஹ்மது சாஹிப் மூலமாகக் கிடைத்தது. மேலும் ஷாஹ் அப்துல்லாஹ் சாஹிப் காஸீ அவர்களைப் பற்றி அவர் (ஹுஸூர் அலைஹிஸ் ஸலாம் அவர்களின் முப்பாட்டனார் ஆகிய) மிர்ஸா குல் முஹம்மது சாஹிப் அவர்களின் காலத்தில் ஓர் எளிய இயல்பு கொண்ட பெரியவர் வாழ்ந்து சென்றிருக்கிறார் என்றும், அவர் மரணித்தபோது மிர்ஸா குல் முஹம்மது சாஹிப் அவர்கள் அவர்களின் மண்ணறையை உருவாக்கியிருந்தார்கள் என்றும் எனது அன்பிற்குரிய மிர்ஸா ரஷீது அஹ்மது அவர்களின் தாயார் மூலமாக எனக்குத் தெரிய வந்தது. எங்களின் சகோதரி அமதுன்னஸீரின் மண்ணறையும் அந்த கபர்ஸ்தானிலேயே இருக்கிறது. (சீரத்துல் மஹ்தி தொகுதி 3 பக்கம் 685-686 அறிவிப்பு எண்: 758)




(தொடரும்...)



# ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு

20

- மவ்லானா அப்துர் ரஹீம் தர்து (ரலி) -

தமிழாக்கம்: S.S.H. முஹம்மது லெப்பை

குழந்தைப் பருவத்தில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது அவர்கள் மிகவும் பலவீனமானவராக இருந்தார்கள். அவர்களுடைய கண் பார்வை குறைபாடுடையதாக இருந்தது. எனவே சிறப்பான பள்ளிக் கல்வி எதையும் பெற முடியவில்லை. பள்ளிக் கல்வியின் இறுதி வகுப்புத் தேர்வில் கூட அவர்களால் வெற்றி பெற முடியவில்லை.

3.10.1898 அன்று அவர்கள் தமது தந்தையின் திருக்கரங்களில் பைஅத் செய்தார்கள். பின்னர் ஹஸ்ரத் மவ்லவி ஹக்கீம் நூருத்தீன் (ரலி) அவர்களிடம் திருக்குர்ஆனையும், நபிமொழிகளில் சில பகுதிகளையும் கற்றார்கள்.

பின்னர் நடைபெற்ற நிகழ்வுகள் அவர்கள்தான் வாக்களிக்கப்பட்ட ஒளிமயமான அந்த மகன் என்பதைச் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கின்றன. பல சிறப்புத் தன்மைகளையும், மகத்துவங்களையும், செல்வத்தையும் அவர்கள் பெற்றிருந்தார்கள். (இந்நூல் எழுதப்பட்டபோது அன்னார் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் இரண்டாவது கலீஃபாவாக இருந்தார்கள்). தம்முடைய தெய்வீக ஆற்றலால் பல நோய்களைக் குணப்படுத்தினார்கள். அன்னார் 1924–ஆம் ஆண்டு பாலஸ்தீனம், டமாஸ்கஸ் போன்ற பகுதிகளுக்குப் பயணம் மேற்கொண்டார்கள். அங்கு வாழ்ந்த மக்கள் தமது மூதாதையர்கள் ஈஸா (அலை) அவர்களோடு உரையாடியதைப் போன்று அன்னாரோடு பேசிப் பழகினர்.

சத்திய ஆவியும், பரிசுத்த ஆவியும் அவர்களோடு உடன் இருக்கின்றன. அன்னார் சிறந்த புத்திக் கூர்மையுடன் விளங்குகிறார்கள். அற்புதமான புரிந்து கொள்ளும் ஆற்றலைப் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் இறை பாதுகாப்பின் கீழ் இருக்கிறார்கள். அன்னாரது எதிரிகள் அவர்களைக் கண்டு அஞ்சி நடுங்குகின்றனர். அவர்களின் வளர்ச்சி அபரிமிதமான வேகத்தில் அமைந்திருந்தது. அவர்களிடமிருந்து வெளிவரும் தெய்வீக ஒளி உண்மையைத் தேடுபவர்களின் உள்ளங்களுக்கு ஒளியேற்றுகிறது. அவர்கள் தம் சிறப்பான வார்த்தைகளால் சந்தேகம் எனும் எல்லா இருள்களையும் அகற்றுகிறார்கள். அவர்களே ஓர் இறையருளாக விளங்குகிறார்கள். முழு உலகத்திற்கும் இறையருளின் ஊற்றாக விளங்குகிறார்கள்.

அன்னார் (ரலி) அவர்களின் புகழ் உலகின் எல்லை வரை பரவியுள்ளது. லாஹூரிலிருந்து இலண்டன் வரையிலும், கோப்–லிருந்து கெய்ரோ வரையிலும், சிகாகோவிலிருந்து ஹாங்காங் வரையிலும் அவர்கள் அறிமுகமாகி இருக்கிறார்கள். மேற்கு ஆப்பிரிக்காவில் பல்லாயிரக்கணக்கான மக்கள் அவர்களை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். மாஸ்கோவிலும், காபூலிலும் அன்னாரைப் பின்பற்றுபவர்கள் வன்கொடுமைக்கும் உயிர் பலிக்கும் ஆளாகி இருக்கின்றனர். புனித மக்கா, டமாஸ்கஸ், பாக்தாத் ஆகிய பகுதிகளின் வீதிகளில் அன்னாரைப் பின்பற்றுவோர் அறியாத நிலப்பரப்பு அல்ல. ரோம், மொரீஷியஸ், சிங்கப்பூர், படாவிய செண்ட்ர்ம், ஹைஃபா, நைரோபி, போனஸ் அயர்ன்ஸ் ஆகிய நாடுகளிலும், நகரங்களிலும் அன்னாரின் பிரதிநிதிகள் பணியாற்றிக் கொண்டிருக்கின்றனர். புடாபெஸ்ட், மெல்போர்ன், நியூயார்க், வார்ஸா ஆகிய இடங்களிலுள்ள பத்திரிகைகள் அவர்களால் வழிநடத்தப்படும் ஜமாஅத்தைப் பற்றி நீண்ட செய்திகளை வெளியிட்டுள்ளன. கிழக்கிந்திய நாடுகளில் இருந்தும், இன்னும் இது போன்ற உலகின் தொலைதூரப் பகுதிகளிலிருந்தும் மாணவர்கள் பெருமளவில் அன்னாரின் காலடியில் அமர்ந்து பாடம் கற்பதற்கு பெரும் திரளாக வருகின்றனர்.



25 வயதே ஆன இளம் பருவத்தில் அவர்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றார்கள். இள வயதிலேயே மிகவும் உயர்வான ஆற்றலையும் ஈடுபாட்டையும் வெளிப்படுத்தினார்கள். அவர்களுடைய தலைமையின் கீழ் இந்த ஜமாஅத் கற்பனை செய்ய முடியாத அளவுக்கு முன்னேற்றம் கண்டது. இவ்வாறு இன்று அது ஓர் உலகளாவிய ஜமாஅத்தாக மாறியுள்ளது. ஜமாஅத்தின் தலைமைப் பொறுப்பை அவர்கள் ஏற்றுக் கொண்டதிலிருந்து உலகில் மிகப் பெரிய மாற்றங்களும், மனித வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் மிகப் பெரிய மாறுதலும் ஏற்பட்டுள்ளன. உலகம் ஓர் உருகும் பாண்டத்தைப் போன்று ஆகியுள்ளது. உள் நாட்டிலும், வெளி நாடுகளிலும் கடுமையான




எதிர்ப்பு இருந்த போதிலும், இந்த ஜமாஅத் உலகின் அனைத்து பகுதிகளிலும் பரவியுள்ளது. அவர் ஒரு சமுதாயக் கட்டமைப்பாளர். முழு மனித இனமும் அவருடைய சமுதாயம் ஆகும். ஜமாஅத்தின் தலைமையகத்தில் பல்வேறு துறைகளை அவர்கள் ஏற்படுத்தியதன் மூலம் ஜமாஅத்தை மிகவும் அற்புதமான விதத்தில் ஒழுங்குபடுத்தி இருக்கிறார்கள். அவையாவன:

நிதித்துறை, கல்வித்துறை, கொள்கை பரப்புத்துறை, நூல் வெளியீட்டுத்துறை, விருந்தினர் உபசரிப்புத்துறை, நீதித்துறை ஆகியவையாகும். அவர்கள் ஒரு மிகச் சிறந்த சொற்பொழிவாளரும், எழுத்தாளரும் ஆவார்கள். இக்காலத்தின் முக்கியமான பிரச்சனைகளைப் பற்றி அன்னார் பல்வேறு நூல்களை எழுதியுள்ளார்கள். ஆயிரக்கணக்கான மக்கள் கவனமாகக் கேட்கின்ற விதத்தில் ஆறு, ஏழு மணி நேரம் தொடர்ச்சியாக உரையாற்றுகின்ற ஆற்றலைப் பெற்றிருக்கிறார்கள். கற்றறிந்த மக்களை அவர்கள் (ரலி) தம் அறிவாற்றலாலும், புலமையாலும் கவர்ந்திழுக்கிறார்கள். அன்னார் பிறப்பிலேயே ஒரு மக்கள் தலைவராவார்கள். ஆளுமைத் திறன், கவர்ச்சி, காந்த சக்தி ஆகியவற்றை ஒருசேரப் பெற்றிருந்தார்கள். அன்புடைமை, பாசம், நன்றியுடைமை ஆகிய பண்புகளில் நிறைந்து காணப்படுகிறார்கள். அவர்கள் தனி மனிதர்களுக்கு முக்கியத்துவம் தருவதில்லை; ஆனால் சட்டத்தின் ஆட்சியின் மீது நம்பிக்கை கொண்டுள்ளார்கள். அவர்கள் விரைவில் நண்பர்களாகி விடுவார்கள். அவர்கள் தாராள மனப்பான்மையும், தயாள குணமும் கொண்டவர்கள். அதே நேரத்தில் இயலாதவரோ, எளிதில் உணர்ச்சி வசப்படுகிறவரோ, போலித்தனம் கொண்டவரோ அல்லர். அவர்கள் ஒரு முதல் தரமான இராஜதந்திரி; இரக்க குணம் கொண்ட ஆட்சியாளர்; திறமையான நிர்வாகி, பாறையைப் போன்று உறுதியானவர்கள். அன்னாரது எஃகு போன்று முடிவெடுக்கும் ஆற்றலும், உறுதிப்பாடும் மலையையே அசைக்க வல்லவை. அவர்கள் சொன்னதை செய்வார்கள்; செய்வதையே சொல்வார்கள். உலகம் இதுவரை கண்ட மிகப் பெரும் மேதைகளில் அவர்களும் ஒருவர். இருந்தபோதிலும் மனித இனத்தை அறிவுப்பூர்வமாகவும், ஆன்மீக ரீதியிலும் உயர்த்துவதற்காகவும், முன்னேறச் செய்வதற்காகவும் அவர்கள் கடுமையாகவும் இடையறாதும் உழைத்து வருகிறார்கள். அன்னார் தமது துஆக்கள் மூலம் இரவும் பகலும் அற்புதங்களை நிகழ்த்தி வருகிறார்கள். அன்னாரோடு நெருங்கிய தொடர்பு கொள்ளும் எவரும் அன்னாரது ஒழுக்க மேம்பாட்டைப் பற்றியும். ஆன்மீக மேன்மையைப் பற்றியும் முழுமையாகப் புரிந்து கொள்வார்கள். உண்மையைச் சொல்லப்போனால், ஒருவர் அன்னாரோடு எந்த அளவுக்கு நெருக்கமான தொடர்பு கொள்கிறாரோ, அந்த அளவுக்கு ஆழமாகவும், ஈடுபாட்டோடும் அன்னாரை மதிக்கவும், நேசிக்கவும், வியக்கவும் செய்கிறார்.

## லூதியானாவில் நடைபெற்ற பைஅத் நிகழ்ச்சி

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தம்மை சீர்திருத்தவாதி என்று அறிவிக்கும் முதல் இறை ஆணையை 1882—ஆம் ஆண்டு மார்ச் மாதம் பெற்றார்கள். நல்லடியார்கள் பலர் தங்களுடைய பைஅத் என்னும் ஆன்மீக உடன்படிக்கையை ஏற்றுக் கொள்ளும்படி 1883—ஆம் ஆண்டின் துவக்கத்திலேயே அன்னார் (அலை) அவர்களை விரும்பிக் கேட்டுக் கொண்டார்கள். ஆனால் அன்னார் (அலை) அவர்கள் அந்த வேண்டுகோளை ஏற்றுக் கொள்ளவில்லை. அவ்வாறு பைஅத் வாங்குவதற்கான அதிகாரம் எதுவும் அதுவரை வழங்கப்பட—வில்லை என்பதால், தாம் அவ்வாறு செய்ய முடியாது என்று தமது இயலாமையை வெளிப்படுத்தினார்கள். மக்களிடம் பைஅத் பெற்று அதன் மூலம் ஒரு ஜமாஅத்தை உருவாக்கும்படியான இறை கட்டளையை அவர்கள் 1888—ஆம் ஆண்டு மார்ச் மாதம் பெற்றார்கள். ஆனால் நின்றவரும், சென்றவரும் இந்த ஜமாஅத்தில் சேர்வதை அவர்கள் (அலை) விரும்பவில்லை. எனவே அதற்கான பொருத்தமான ஒரு சந்தர்ப்பத்தை

எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். அது முதலாவது பஷீர் அவர்களின் மரணத்தின்போது ஏற்பட்டது. அப்போது உள்ளத்தில் உறுதி இல்லாதவர்களும் மேம்போக்கான தன்மை கொண்டவர்களும் அவர்களை விட்டு விலகிச் சென்றார்கள்.

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தம்மைத் தாமே சீர்திருத்தவாதியாக அறிவித்துக் கொண்ட உலகியல் தலைவராக இருந்தால், அப்படிப்பட்ட முயற்சியை மேற்கொள்வதற்கு அதுதான் மிகவும் மோசமான தருணம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. முதலாவது பஷீரின் மரணம் (4.11.1888) ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வாதங்களைப் பொய்யாக்கி விட்டது என்று மக்கள் அன்னாரைத் தூற்றிக் கொண்டிருந்த நேரம் அது. ஆனால் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் இறைவனால் அனுப்பப்பட்ட ஒரு சீர்திருத்தவாதியாக இருந்த காரணத்தால் அந்தப் பழியுரைகளுக்கு எந்த முக்கியத்துவமும் கொடுக்கவில்லை; மக்களின் ஆதரவை வேண்டி நிற்கவுமில்லை. மாறாக, உலகியல் நோக்கில் மிகவும் பொருத்தமில்லாத நேரம் என்று கருதப்பட்ட ஒரு நேரத்தை அவர்கள் இந்த நோக்கத்திற்காகத் தேர்ந்தெடுத்தார்கள். 1888–ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் நாள் அவர்களும் தம்மிடம் பைஅத் செய்ய வரும்படிக் கேட்டுக் கொள்ளும் ஒரு பிரசுரத்தை வெளியிட்டார்கள்.

வாக்களிக்கப்பட்ட புகழுக்குரிய மகனான மஹ்மூது அஹ்மது (ரலி) அவர்கள் பிறந்த அருளுக்குரிய நாளான 1889–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12–ஆம் நாள் அவர்கள் (அலை) பைஅத் செய்து இந்த ஜமாஅத்தில் நுழைவோருக்கான நிபந்தனைகளை வெளியிட்டார்கள். அதில் அவர்கள் பைஅத் செய்ய வரும் ஒவ்வொருவரும் பின்வரும் விஷயங்கள் தொடர்பாக உறுதியான நிலையை மேற்கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டார்கள்: (பைஅத் நிபந்தனைகள்)

1. நான் மரணமடைகின்றவரை ஷிர்க் என்னும் இறைவனுக்கு இணைவைப்பதிலிருந்து தவிர்ந்து கொள்வேன்.

2. பொய், விபச்சாரம், தீய பார்வை, கட்டுப்படாமலிருத்தல், அநீதியிழைத்தல், ஏமாற்றுதல், குழப்பம் விளைவித்தல், கிளர்ச்சி செய்தல் ஆகிய தீமைகளிலிருந்து தவிர்ந்து கொள்வேன். மன உணர்ச்சிகள் எந்த அளவு தீவிரமடைந்தாலும் அவற்றை அடக்கிக் கொள்வேன்.

3. இறைவனின் கட்டளையின்படியும், அவனுடைய தூதரின் கட்டளையின்படியும் ஐந்து வேளைத் தொழுகைகளை விடாமல் நிறைவேற்றி வருவேன். என்னால் இயன்றவரை தஹஜ்ஜுத் எனும் நடு இரவுத் தொழுகை, முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் மீது ஸலவாத் ஓதுதல், நாள்தோறும் எனது பாவங்களுக்காக இறைவனிடம் மன்னிப்புக் கேட்டல் ஆகியவற்றில் தொடர்ந்து ஈடுபடுவேன். இறைவனின் பேருதவிகளை நெஞ்சார நினைவில் கொண்டு அவனை நாள்தோறும் புகழ்ந்து வருவேன்.

4. பொதுவாக எல்லா மக்களுக்கும், குறிப்பாக முஸ்லிம்களுக்கும் எனது மன உணர்ச்சியின் காரணமாக நாவினாலோ, கைகளினாலோ, வேறு எந்த வகையாலோ தகாத எந்தத் தொல்லையும் கொடுக்க மாட்டேன்.

5. துக்கம், மகிழ்ச்சி, பணக் கஷ்டம், பண வசதி, இறைவனிடமிருந்து கிடைக்கும் அருள், அவனால் தரப்படும் சோதனை ஆகிய எந்த நிலையிலும் இறைவனிடம் மனங்கோணாமல் பற்றுள்ளவனாக இருப்பேன். இறைவனின் தீர்ப்பை எந்த நிலையிலும் உளப்பூர்வமாக ஏற்றுக் கொள்வேன். அவன் வழியில் எல்லா வகையான இழிவையும், இன்னல்களையும் ஏற்க ஆயத்தமாக இருப்பேன். எத்தகைய தொல்லைகளுக்கு ஆளானாலும் முகஞ்சுளிக்காமல் முன்னேறிச் செல்வேன்.

6. சடங்கு சம்பிரதாயங்களிலிருந்தும், மனத்தின் சொந்த விருப்பங்களைப் பின்பற்றுவதிலிருந்தும் தவிர்ந்து கொள்வேன். திருக்குர்ஆனின் ஆட்சிக்கு முழுமையாகக் கட்டுப்பட்டு, இறைவனின் போதனைப்படியும், அவன் தூதரின் போதனைப்படியும் நடப்பதையே எல்லா நிலையிலும் எனது நடைமுறையாக ஆக்கிக் கொள்வேன்.

7. தற்பெருமையையும், அகம்பாவத்தையும் முற்றாக விட்டு விடுவேன். பணிவாக நடத்தல், இனிய குணம், சகிப்புத்தன்மை, எளிமை ஆகியவற்றையே மேற்கொண்டு வாழ்க்கை நடத்துவேன்.

8. மார்க்கம், அதன் கண்ணியம், இஸ்லாத்திற்குத் தொண்டு செய்தல் ஆகியவற்றை எனது உயிர், பொருள், கண்ணியம், குழந்தைகள், உறவினர்கள் ஆகிய எல்லாவற்றையும் விட மிகவும் உயர்வாகக் கருதுவேன்.

9. இறைவனின் படைப்புகளாகிய எல்லாருக்கும் தொண்டு செய்வதில் எந்தப் பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் இறைவனுக்காகவே தொடர்ந்து தொண்டு செய்வதில் ஈடுபட்டிருப்பேன். அவனால் எனக்கு வழங்கப்பட்ட ஆற்றல்களாலும், அருள்களாலும் என்னால் முடிந்த வரை மனித குலம் பயன்பெறும் வகையில் பணியாற்றுவேன்.



10. இறைவனுக்காக நல்ல விஷயங்களில் நான் கட்டுப்படுவேன் என இந்த எளியவனிடம் (ஹஸ்ரத் அஹ்மது அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம்) நான் செய்து கொள்ளும் இந்த சகோதர உடன்படிக்கையில் நான் மரணமடைகின்ற வரை நிலைத்திருப்பேன் எனவும், மற்றெல்லா உலகத் தொடர்புகளை விடவும் இந்த சகோதர உடன்படிக்கையே மிகவும் உயர்ந்ததாக இருக்கும் எனவும் நான் உறுதி கூறுகிறேன்.

1889–ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் லூதியானா சென்றார்கள். அங்கு அம்மாதம் நான்காவது நாள் ஒரு பிரசுரத்தை வெளியிட்டார்கள். அதில் அவர்கள் (அலை) மார்ச் 25–ஆம் தேதி வரை ஜதீது முஹல்லாவிலுள்ள முன்ஷி அஹ்மது ஜான் என்பவரின் வீட்டில் தங்கி இருக்கப்போவதாகவும், தம்முடைய சீடர்களாக விரும்புவோர் மார்ச் மாதம் 20–ஆம் தேதிக்கு மேல் அங்கு வருமாறும் குறிப்பிட்டிருந்தார்கள். 25–ஆம் தேதிக்குப் பிறகு வருவோரை காதியானுக்கு வருமாறு கேட்டுக் கொண்டார்கள். மேலும் பைஅத்தின் பொருளைப் பற்றியும், அதன் அவசியத்தைப் பற்றியும், அதன் முக்கியத்துவத்தைப் பற்றியும் விளக்கமாகக் கூறியிருந்தார்கள். தம்முடைய சீடர்கள் ஒவ்வொருவருடைய பெயர், முகவரி அடங்கிய விபரங்களை முறையாகப் பாதுகாத்து வரப்போவதாகவும் கூறியிருந்தார்கள். அவர்கள் மேலும் கூறியதாவது:

“தன்னுடைய மகத்துவத்தையும் ஆற்றலையும் வெளிப்படுத்திக் காட்டுவதற்காக இறைவன், நல்லடியார்கள் அடங்கிய ஒரு ஜமாஅத்தை நிறுவ நாடுகிறான். மக்கள் மத்தியில் இறையன்பு, நேர்மை, தூய்மை, இறை நேசம், சாந்தி, நல்லெண்ணம் ஆகியவற்றை ஏற்படுத்துவதற்காக இந்த ஜமாஅத்தை வளரவும், செழிக்கவும் செய்வான். அது இறைவனுக்காகத் தம்மை அர்ப்பணித்த ஒரு மக்கள் கூட்டமாக இருக்கும். அவன் தனது பரிசுத்த ஆவியால் அவர்களை உறுதிப்படுத்துவான். அவர்களை அருள்பாலித்து தூய்மையாக்குவான். அவன், தான் வாக்களித்தபடி அவர்களை பல்கிப் பெருகச் செய்வான். ஆயிரக்கணக்கான உண்மையாளர்கள் அவனது அடியார்களாகச் சேர்வார்கள். அவன், தானே அவர்களைப் பராமரித்து இந்த ஜமாஅத்தை வளரச் செய்வான். எந்த அளவுக்கென்றால், அதன் எண்ணிக்கையும், வளர்ச்சியும் உலகை அதிசயிக்க வைக்கும். இந்த ஜமாஅத் உலகின் நாலா திசைகளையும் ஒளிவிட்டுப் பிரகாசிக்கச் செய்யும் ஒரு கலங்கரை விளக்கமாக அமையும். அதன் உறுப்பினர்கள் இஸ்லாத்தின் அருட்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்வார்கள். என்னை உண்மையாகப் பின்பற்றுபவர்கள் பிற மக்களை மிகைத்து நிற்பார்கள். இறுதி நாள் வரை அவர்கள் மத்தியில் எல்லா விதத்திலும் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட நன்மக்கள் தோன்றிக் கொண்டே இருப்பார்கள். சர்வ வல்லமையுள்ள இறைவன் அவ்வாறே தீர்மானித்திருக்கிறான். அவன், தான் நாடியதைச் செய்கின்றான்.”

இந்தப் பிரசுரத்தை வெளியிட்ட பின் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் சில நாட்கள் ஹோஷ்யார்பூர் செல்ல வேண்டியதிருந்தது. அங்கு நடைபெறவிருந்த சவுத்ரி மெஹர் அலியின் மகனின் திருமணத்தில் கலந்து கொள்ளும்படி அவர்கள் அழைக்கப்பட்டிருந்தார்கள். அந்தப் பயணத்தின்போது எம். அப்துல்லாஹ் சனோரி, சவுத்ரி ஹாமிது அலி, மீர் அப்பாஸ் அலி ஆகியோர் அவர்களுடன் சென்றார்கள். 1889–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16,17,18 ஆகிய நாட்கள் அவர்கள் ஹோஷ்யார்பூரில் தங்கி இருந்ததாகத் தெரிய வருகிறது.

முறைப்படியான பைஅத்தை வாங்கும் நிகழ்ச்சி 1889–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23–ஆம் நாள் நடைபெற்றது. இந்த ஜமாஅத்திற்கான அடித்தளம் இடப்பட்ட இடம் ஆரம்பரமில்லாத ஒரு சிறிய கட்டடம் ஆகும். அதன் வடக்கிலும், கிழக்கிலும் பாதைகள் அமைந்திருந்தன. வடக்குப் பக்கமும், தெற்குப் பக்கமும் அமைந்திருந்த அறைகளுக்கு மத்தியில் திறந்த வெளி முற்றம் இருந்தது. மேற்குப் பக்கமும், கிழக்குப் பக்கமும் அறைகள் எதுவும் இருக்கவில்லை. வடக்குப் பக்கத்தின் கீழ்ப் பக்கம் அமைந்திருந்த அறையில் பைஅத் வாங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. அந்த இடம் பிற்காலத்தில் ஜமாஅத்தால் விலைக்கு வாங்கப்பட்டு அதன் பழைய அமைப்பு அப்படியே விடப்பட்டது. இப்போது அதன் தென் பக்கம் அறைகள் எதுவும் இல்லை. வெற்றிடமாகக் கிடந்த இடத்தில் சமீபத்தில் ஒரு பள்ளிவாசல் கட்டப்பட்டுள்ளது.



ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் வடகிழக்கு மூலையில் அமைந்திருந்த அறையில் அமர்ந்திருந்தார்கள். சவுத்ரி ஹாமிது அலி அவர்கள் அந்த அறையின் வாசலில் இருக்க வைக்கப்பட்டிருந்தார்கள். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் ஒவ்வொருவராகப் பெயர் கூறி அழைத்தார்கள். மவ்லவி நூருத்தீன் (ரலி) அவர்கள் முதலாவதாக அழைக்கப்பட்டார்கள். பிறகு மீர் அப்பாஸ் அலி, முராதாபாத்தைச் சேர்ந்த மியான் முஹம்மது ஹுஸைன், எம். அப்துல்லாஹ் சனோரி ஆகியோர் ஒருவர் பின் ஒருவராக அழைக்கப்பட்டார்கள். மேலு ஓரிருவர் இவ்வாறு பெயர் கூறி அழைக்கப்பட்டனர். பின்னர் ஒவ்வொருவராக உள்ளே அனுப்பும்படி சவுத்ரி ஹாமிது அலி கேட்டுக் கொள்ளப்பட்டார். முதலில் ஒவ்வொருவரிடமும் தனித்தனியாக பைஅத் வாங்கப்பட்டது. பின்னர் சிறு சிறு குழுக்களாக பைஅத் செய்தனர்.

(தொடரும்...)

# இறையருட்களின் மழை!




அல்லாஹ்வின் அருளினால் 57-வது UK ஆண்டு மாநாடு கடந்த ஜுலை 28, 29 மற்றும் 30 ஆகிய மூன்று தினங்கள் இங்கிலாந்தில் உள்ள ஹேம்ப்ஷயரில் ஆல்டன் நகரில் ஹதீகத்துல் மஹ்தி (மஹ்தியின் தோட்டம்)-யில் தனது அருட்களை வெளிப்படுத்தியவாறு இனிதே நடைபெற்றது. அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்திற்குச் சொந்தமான 208 ஏக்கர் பரப்பளவு கொண்ட ஹதீக்கத்துல் மஹ்தியில் UK ஜல்ஸா ஸலானா வழக்கமாக நடைபெற்று வருகிறது. இவ்வாண்டு நடைபெற்ற இந்த அருளுக்குரிய மாநாட்டில் 118 நாடுகளிலிருந்து 41,654 பேர் கலந்து கொண்டனர்.

மாநாட்டின் இரண்டாம் நாள் அன்று ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கடந்த ஓராண்டில் ஜமாத்திற்குக் கிடைத்த இறையருட்களைக் குறித்து விளக்கமாக எடுத்துரைத்தார்கள். அதிலிருந்து சில துளிகள்:

- கடந்த வருடத்தில் 329 இடங்களில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கிளைகள் நிறுவப்பட்டிருப்பதாகவும், 1016 புதிய இடங்களில் அஹ்மதிய்யத் வேரூன்றப்பட்டிருப்ப -தாகவும் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் குறிப்பிட்டார்கள்.
- பள்ளிவாசல்களைப் பொறுத்தவரை சென்ற ஆண்டு 185 பள்ளிவாசல்களை ஜமாஅத் பெற்றிருக்கின்றது. அவற்றுள் 125 புதிதாகக் கட்டப்பட்டவையாகும். இது தொடர்பாக ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறும்போது பாக்கிஸ்தான் அரசு அஹ்மதிகளைப் பள்ளிவாசலில் தொழுவதை விட்டும் தடுக்கிறது. மேலும் நமது பள்ளிவாசல்களைச் சேதப்படுத்தவும் செய்கின்றது. ஆனால் அல்லாஹ் நமக்கு உலகில் பல்வேறு நாடுகளில் பள்ளிவாசல்களைக் கட்டுகின்ற நற்பேற்றையும், இஸ்லாத்தை உலகில் பரப்பக் கூடிய நல்வாய்ப்பையும் தந்து கொண்டிருக்கின்றான் என்றுகுறிப்பிட்டார்கள்.
- மத்திய ஆப்ரிக்காவில் நமது பள்ளிவாசலுக்கு ஓர் அஹ்மதி அல்லாத முஸ்லிம் நண்பர் வருகை தந்தார். அதனை அவர் புகைப்படம் எடுத்துக் கொண்டிருந்தார். அந்தப் பள்ளிவாசல் 5 மில்லியன் உள்ளூர் கரன்சியில் கட்டப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டபோது அவர் பெரிதும் வியப்புற்றவாறு இதுபோன்ற ஒரு பள்ளிவாசலை தற்போதைய பொருளாதார சூழலில் எமது ஆலிம்கள் 10 மில்லியன் கரன்சியில் கூட கட்ட முடியாது என்று குறிப்பிட்டார். பள்ளிவாசல் கட்டும் விஷயம் தொடர்பாக ஈமானுக்கு வலுவூட்டும் பல சம்பவங்களை ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் எடுத்துரைத்தார்கள்.



- ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் தமது உரையில் ஆப்ரிக்கா, ஐரோப்பா மற்றும் இதர கண்டங்களில் மொத்தமாக 124 பிரச்சார நிலையங்கள் ஜமாஅத்திற்கு சென்ற வருடம் கிடைத்திருப்பதாகக் குறிப்பிட்டார்கள்.
- திருக்குர்ஆன் இதுவரை 76 மொழிகளில் மொழியாக்கம் செய்து வெளிடப்பட்டுள்ளது. மேலும் சில மொழியாக்கங்கள் அச்சிடத் தயாராக உள்ளன.
- ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நூற்கள் அனைத்தும் அரபி மொழியாக்கம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டு விட்டன. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் 82 புத்தகங்கள் ஜெர்மன் மொழியில் வெளிடப்பட்டு விட்டதாகவும் அவற்றுள் 10 நூற்கள் கடந்த ஓராண்டில் வெளியிடப்பட்டதாகவும் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் குறிப்பிட்டார்கள்.
- மேலும் இந்தியாவில் நஷ்ரோ இஷாஅத் துறை சார்பாக பல பணிகள் நடைபெற்று வருவதாக குறிப்பிட்ட ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் புத்தகங்கள் பல்வேறு இந்திய மொழிகளில் வெளியிடப்பட்டு வருவதைக் குறிப்பிடும்போது தமிழ் மொழியையும் குறிப்பிட்டுக் கூறினார்கள்.
- வக்காலத்தே இஷாஅத் (வெளியீடு) துறையின் அறிக்கையின்படி புத்தகங்கள் மற்றும் பிரசுரங்களின் 5.89 மில்லியன் பிரதிகள் 47 மொழிகளில் கடந்த ஆண்டில் வெளியிடப்பட்டுள்ளன. 124 பத்திரிகைகள் பல்வேறு ஜமாஅத்கள் மற்றும் கிளை அமைப்புகள் சார்பாக வெளியிடப்படுகின்றன.
- வக்காலத்தே இஷாஅத் (தர்ஸீல்) துறையின் அறிக்கையின்படி சென்ற ஆண்டு 166000 புத்தகங்கள் 24 மொழிகளில் 45 நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்

-பட்டுள்ளன. பல்வேறு நாடுகளில் 884 தலைப்புகளில் 9.9 மில்லியனுக்கும் அதிகமான புத்தகங்களும் பிரசுரங்களும் இலவசமாக விநியோகிக்கப்பட்டுள்ளன. அதன் மூலம் முழு உலகிலம் 1.5 மில்லியன் தனி நபர்களுக்கு இஸ்லாத்தின் தூதுச் செய்தி எட்ட வைக்கப்பட்டுள்ளது.

❖ 9166 கண்காட்சிகள் நடத்தப்பட்டுள்ளன. அதன் மூலம் 420000 மக்களுக்கு தூதுச் செய்தி சென்றடைந்தது. 1774 திருக்குர்ஆன் பிரதிகள் இலவசமாக விநியோகிக்கப்-பட்டுள்ளன. 8500 புக் ஸ்டால்களும் புத்தகக் கண்காட்சிகளும் நடத்தப்பட்டுள்ளன. இவற்றின் மூலமாக 1.7 மில்லியன் மக்கள் பயன் பெற்றனர்.

❖ சென்ற வருடத்தில் 107 நாடுகளில் 11 மில்லியன் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் இஸ்லாத்தின் தூதுச் செய்தி 18 மில்லியன் மக்களைச் சென்றடைந்நது.

❖ 121 ஆண்டுகளுக்கு முன்னர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட ரிவியூ ஆ.ஃப் ரிலிஜியன்ஸ் மாத இதழ் தற்போது அல்லாஹ்வின் அருளினால் உலகில் பல்வேறு மொழிகளில் வெளியிடப்படுறது. சென்ற ஆண்டு 200,000 பிரதிகள் வெளிடப்பட்டுள்ளன.

❖ அல் .ஃபஸ்ல் பத்திரிகை 2019-லிருந்து வாரம் இருமுறை வெளிவந்து கொண்டிருந்த நிலையில் தற்போது இது நாளிதழாக வெளிவந்து கொண்டிருக்கிறது. பாகிஸ்தானில் தடை செய்யப்பட்டுள்ள இந்த இதழ் சமூக வலைதளங்கள் மூலமாக பல இலட்சம் மக்களைச் சென்றடைகிறது.

❖ வக்.ஃபே நவ் திட்டத்தின் கீழ் இது வரை அர்ப்பணிக்கப்-பட்டுள்ள குழந்தைகளின் எண்ணிக்கை 80600 ஆகும். இதில் 47000 ஆண் குழந்தைகள் 33000 பெண் குழந்தைகள் ஆவர். 15 வயதைக் கடந்துள்ள வாகி.ஃபீன்கள் 39000 பேர் ஆவர்.

❖ IT-ன் மத்தியத்துறை சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. கானாவிலும் நைஜீரியாவிலும் குலாம் காதிர் ஷஹீத் IT Research Institute நிறுவப்பட்டுள்ளது.

❖ AlIslam websits-ல் ஜமாஅத்தின் ஏராளமான புத்தகங்கள் கணிணி மயமாக்கப்பட்டு Upload செய்யப்பட்டு வருகின்றன. பல App-கள் தயார் செய்யப்படுகின்றன அல்லது மேம்படுத்தப்படுகின்றன. வலைதளத்தின் பல அம்சங்களும் மேம்படுத்தப்படுகிறது. இந்த அனைத்துப் பணிகளும் தன்னார்வலர்களாலே நடைபெறுகிறது.

❖ MTA-வில் 506 பேர் பணிபுரிகின்றனர். அதில் பெரும்பாலார் தன்னார்வலர்கள். MTA தற்போது மொத்தம் 8 சேனல்-களுடன் 24 மணி நேரமும் ஒளிப்பரப்பாகின்றது. MTA-6 ASIA மற்றும் MTA-7 ASIA தற்போது Streaming-ஐ துவக்கி விட்டன. MTA தற்போது UK-விலும் ஐரோப்பாவிலும் HD-யிலும் கிடைக்கிறது. MTA Africa பல்வேறு அம்சங்களில் முன்னேறி வருகிறது. MTA Africa-விற்கு தற்போது 12 கிளைகள் உருவாகி விட்டன. MTA பார்ப்பதன் மூலமாக பலர் அஹ்மதிய்யத்தை ஏற்று வருகின்றனர்.

❖ தற்போது அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்திற்கு 25 ரேடியோ நிலையங்கள் உள்ளன. இவற்றின் மூலம் சிறப்பாக தப்லீக் நடைபெற்று வருகிறது. அரபி, துருக்கி மற்றும் ஜெர்மானிய மொழிகளில் ஒலிபரப்பு செய்யும் வானொலி நிலையங்கள் ஜெர்மனியிலிருந்து இயங்கி வருகின்றன. இங்கிலாந்திலிருந்து இயங்கி வருகின்ற VOICE OF ISLAM ரேடியோ ஒலிபரப்பின் தரம் இவ்வாண்டு உயர்த்தப்பட்டுள்ளது. ரேடியோ ஒலிபரப்புகள் மூலமாகவும் பலர் அஹ்மதிய்யத்தை ஏற்று வருகின்றனர்.




❖ நுஸ்ரத் ஜஹான் திட்டத்தின் கீழ் 13 ஆப்ரிக்க நாடுகளில் 37 மருத்துவமனைகளும் கிளினிக்குகளும் நடத்தப்பட்டு வருகின்றது. நூற்றுக்கணக்கான பள்ளிக்கூடங்களும் நடத்தப்படுகின்றன.

❖ மனிதம் முதலில் அமைப்பு (HUMANITY FIRST) தற்போது 29 நாடுகளில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ளது. HUMANITY FIRST சார்பில் தற்போது மருத்துவமனை-களும் நிறுவப்படுகின்றன. எனவே முதலுதவி சிகிச்சை தவிர வழக்கமான சிகிச்சைப் பிரிவுகளும் இந்த மருத்துவமனைகளில் இடம் பெறுகின்றன.

❖ சென்ற ஆண்டு ஆயிரக்கணக்கான புதிய அஹ்மதிகள் தொடர்பு கொள்ளப்பட்டனர். அவர்களுக்காக 41000 தரபிய்யத் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

❖ ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை மக்கள் ஏற்றுக் கொண்டு அஹ்மதிய்யத்தில் நுழைந்த பல சம்பவங்-களை எடுத்துக் கூறினார்கள். கடந்த ஆண்டில் 217168 பேருக்கு பைஅத் செய்து இஸ்லாம் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்ளும் நற்பேற்றை அல்லாஹ் வழங்கியுள்ளான் என்று ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் அறிவித்தார்கள். நைஜீரியா பைஅத் எண்ணிக்கையில் முதலிடத்தைப் பெற்றுள்ளது. இது தொடர்பாக எண்ணற்ற ஈமானுக்கு வலுவூட்டும் சம்பவங்கள் இருப்பதாகவும் அவற்றை குறுகிய நேரத்தில் எடுத்துரைக்க இயலவில்லை என்றும் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் குறிப்பிட்டார்கள்.

(தொகுப்பு: A. நாஸிர் அஹ்மது)

Editor: A. Nasir Ahmad | Sub-Editorial: Maulavi M. Muhammad Sultan Muhiyudeen | Design & Layout: A. Abdul Nizar | Manager: A. Samsul Alam